குழந்தைகள் பத்திரிகை
7-12-75
60 காசு

# கோகுலம்



# கோகுலம்

மலர் 4 ✲ இதழ் 18

டிசம்பர் 7, 1975

ராட்சஸ, கார்த்திகை 21


உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்


சந்தா விகிதம்
இந்தியா

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூ. 15.00 |
| ஆறு மாதம் | ரூ. 7.50 |


இதர வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூ. 33.00 |
| ஆறு மாதம் | ரூ. 16.50 |


## காகித மணி மாலை

விடுமுறை நாட்களில் வெளியே போக முடியவில்லை, பொழுதும் போகவில்லை. என்ன செய்யலாம்? உபயோகமான காரியமாக இதோ இந்தக் காகித மணிகளைத் தயாரித்தால் இந்த மணிகளைக் கொண்டு மாலைகள், புரூச், வளையல், ஆடைகளுக்கு அழகூட்டும் பூக்கள் இப்படி எத்தனையோ வகைகளில் அலங்கரிக்கலாம். இதற்கு வேண்டியதெல்லாம் நல்ல உறுதியான காகிதங்கள்—பல வர்ணங்களில் கிடைக்குமானால் நல்லது. காகிதங்களை நீண்ட முக்கோண வடிவில் வெட்டிக் கொள்ளுங்கள். பிறகு வெட்டிய முக்கோணத் துண்டுகளை வழுவழுப்பான ஒரு குச்சியில் படம் 1ல் காட்டியபடி வைத்து அழுத்திச் சுற்றுங்கள். காகிதத்தின் முனையில் (முடிவில்) சிறிது பசை தடவி படம் 2ல் காட்டியபடி ஒட்டி நன்கு உருட்டி விடுங்கள். பிறகு குச்சியை உருவி எடுத்து விடுங்கள். ஒரு மணி தயாராகி விட்டது. இப்படியே பொறுமையாகப் பல காகித மணிகளைத் தயாரித்துக்-கொள்ளுங்கள். வெள்ளைக் காகிதமானால் இவற்றுக்கு வேண்டிய வண்ணங்களைப் பூசிக் கொள்ளலாம். இனி இந்தக் காகித மணிகளைக் கொண்டு படம் 3ல் உள்ளது போல் ஒரு கயிற்றில் கோர்த்து (நடுவில் துவாரம் இருக்குமில்லையா?) மாலை தயாரிக்கலாம். ஒரு காகித மணிக்கும் அடுத்ததுக்கும் பாசி மணிகளையோ கண்ணாடி, பிளாஸ்டிக் மணிகளையோ கோர்த்துக் கொண்டால் மாலை இன்னும் அழகாக இருக்கும். இந்தக் காகித மணிகளைக் கொண்டு இன்னும் என்னென்ன செய்யலாம்? இதோ படம் (A)யில் காட்டியுள்ளபடி காகித மணிகளின் ஒரு முனையில் ஊசி கொண்டு துவாரம் செய்து (காகிதமாதலால் சுலபமாகத் துவாரமிட முடியும்) இப்படி மெல்லிய கம்பியில் கோர்த்து அதை ஹேர் பின்னில் இணைத்துத் தலையில் புரூச் போல அணிந்து கொள்ளலாம். படம் (B) மாலையில் இது ஒரு வகை. ஒரு காகித மணியை அடுத்து ஓரத்தில் துவாரமிட்ட இன்னொரு காகித மணியை இப்படி டாலர்களாகக் கோர்த்துத் தயாரிக்கலாம். இதில் காகித மணிகளின் வர்ணங்களை மாற்றி மாற்றி கோர்த்தால் கவர்ச்சியாக இருக்கும். படம் (C)யில் காட்டியுள்ளபடி மெல்லிய கம்பியில் வளையல்கள் செய்து அணிந்துகொள்ளலாம். ஸ்கர்ட்டில் உள்ள பைகளில் படம் (D)யில் உள்ளபடி இதே மணிகளை வைத்துத் தைத்துக் கொள்ளலாம். (சலவைக்குப் போடும்போது பிரித்து எடுத்துவிட வேண்டும்!) எளிய ஆனால் பார்க்க அழகாக, கவர்ச்சியாக இருக்கும். செய்து பாருங்கள். அப்போது தான் அதன் சுவாரஸ்யம் தெரியும்.

— எம். சாந்தா



# சோம்பேறி என்று பெயர் வாங்காதே! தம்பி.....

‘வாண்டு’



அவனுக்குப் பதினைந்து வயது... தலையிலிருந்து வழிந்து கண்களைமறைக்கும் முடிக்கற்றையைக் கைகளால் ஒதுக்கி விட்டுக் கொண்டு நின்றான், தாயாரிடம் விடைபெறுவதற்காக.

''நான் வீண் பொழுது போக்க மாட்டேனம்மா'' என்றான்.

''அது எனக்குத் தெரியும், நீ வெட்டியாகப் பொழுதைக் கழிக்க மாட்டாய் என்று.'' அவளுக்குத் தன் மகன் பொய்பேச மாட்டான் என்பதில் நம்பிக்கை. தன் சொல்படி கேட்டு நடப்பவன் என்பதில் பெருமிதமும் கூட.

ஓடும் ரயில் வண்டியில் செய்தித் தாள்களைக் கூவி விற்கும் வேலை பார்த்து வந்தான் அவன். இப்போது அந்த வேலையும் போய் விட்டது. வேலையைப் போக்கிக் கொண்ட வேதனையினால் கனத்த நெஞ்சத்தோடு வீட்டுக்கு வந்த மகனை அவள் கோபிக்கவில்லை, குறை கூற—வில்லை. '' நடந்தது நடந்து விட்டது. பேசாமல் சோம்பி நிற்காதே, வேறு வேலைக்கு முயற்சி செய்'' என்றாள். முகத்தில் முறுவலை வரவழைத்துக் கொண்டு அவன் முதுகில் தட்டிக் கொடுத்து தலைமயிரை வாஞ்சையோடு கோதி ஒதுக்கி விட்டு உற்சாகப்படுத்தி அனுப்பினாள். அவன் நம்பிக்கையோடு போவதைப் பார்த்தபடி கதவருகில் நின்றவள் அவன் காது கேட்கும்படி கூறினாள் உரக்க. ''சோம்பேறியாக இல்லாதவர்களுக்கு ஆண்டவன் உதவுவான் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்.''


அன்று காலை முழுதும், நண்பகல் வரை கூட அந்தப் பையன் ஏறாத இடமில்லை. வேலை கேட்டு அலையாத அலுவலகமில்லை.

அது ஒரு சின்னஞ் சிறிய ஊர்தான், ஆனால் காலையிலிருந்து நடந்து நடந்து தோல்வியே கண்ட அவனுக்கு அது மிகப் பெரிய ஊராகத் தோன்றியது. கால்கள் கெஞ்சின. ''ஐயா! நான் பலசாலி. எந்தக் கடினமான வேலையையும் செய்வேன்'' இதைத் திரும்பத் திரும்ப எத்தனை பேரிடம் எவ்வளவு தடவைகள் சொல்லுவது. அவன் வாய் வலித்தது.

''நீ தேவையில்லை தம்பி...''

''வேலை காலியில்லை, போ!'' இதைக் கேட்டுக் கேட்டு அவன் காது அடைத்துப் போயிற்று. அலுத்துச் சலித்துத் துவண்ட மனத்தோடு வீடு திரும்பினான் அவன்.

''இதோ பார், சுவையான சூடான ஆகாரமும் அமைதியான தூக்கமும் மறுநாள் உன்னைப் புது மனிதனாக எழுப்பி விடும்'' என்று தெம்பூட்டினாள்




தாயார். அவனுக்குத் தாயாரின் வார்த்தைகளில் நம்பிக்கை இல்லை. இனி அந்த ஊரில் பார்ப்பதற்கு, வேலை கேட்பதற்கு யாருமே பாக்கி இல்லையே.

ஆனால் அடுத்த நாள் காலை அவன் சோம்பிக் கிடக்கவில்லை. சும்மா இருக்கவில்லை. முயன்று பார்க்கக் கிளம்பி விட்டான். அவன் தாயார் வழியனுப்பினாள் வழக்கம் போல, ''உழைப்பாளிகளுக்கு உதவ எத்தனையோ அதிசயமான வழிகளை அறிந்தவர் ஆண்டவன். ஆகவே மகனே, தைரியத்தை இழக்காதே. சோம்பேறியாக நிற்காதே!''

அவன் சோம்பேறியும் அல்ல, சும்மாவும் நிற்கவில்லை. ஆனால் வேலை கொடு என்று போய்க் கேட்பதற்கு அந்த ஊரில் வேறு யாருமே இல்லையே. உழைக்கத் தயாராக இருக்கிறான். ஆனால் உழைப்பை ஏற்றுக் கொள்ள யாருமில்லையே!

சோர்ந்த மனத்தனாக, எங்கே போவது என்று புரியாத நிலையில் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனான். அவனுக்குப் பிடித்த இடம் அதுதான்.

இவனைப் போலவே ஸ்டேஷன்மாஸ்டரின் சின்னப் பையனுக்கும் ரயில் வண்டிகளைப் பார்த்து மகிழ்வதில் ஓர் ஆனந்தம். அந்த ஆனந்தத்தில் தண்டவாளத்திற்கு இடையே ஓடினான் சின்னப் பையன். ஒரு வண்டி அந்த லைனில் வேகமாக வந்து கொண்டிருந்தது. வேலை தேடிக் கிடைக்காமல் சோர்ந்து போய் வந்திருந்த பெரிய பையன் இதைப் பார்த்தான். ஒரே வி தான். குபீரென்று ரயில் பா



யில் குதித்தான். தண்டவாளத்தில் வரும் அபாயம் தெரியாமல் நின்று கொண்டிருந்த சின்னப் பையனை அள்ளி அணைத்துக் கொண்டு அப்படியே கீழே உருண்டு தண்டவாளத்துக்கு அப்பால் போனான். அதே க்ஷணத்தில் ரயில் வண்டியும் அவர்களைக் கடந்து போயிற்று.

எல்லாம் இமைக்கும் நேரத்தில், ஏன், அதையும் விட வேகமாக நிகழ்ந்து விட்டன. ஸ்டேஷன் அதிகாரி ஓடி வந்தார். தம் அருமை மகனைக் காப்பாற்றியதற்காகப் பாராட்டினார், நன்றி கூறினார். பிறகு அவனைப் பற்றிக் கேட்டார். அவனும் தன் நிலையைக் கூறினான். ''நீ விரும்பினால் நான் உனக்குத் தந்தி அடிக்கும் முறையைக் கற்றுத் தருகிறேன். அது உனக்கு வாழ வழி காட்டும்'' என்றார். அப்படியே அவருடைய உதவியால் தந்தி அனுப்பும் முறையைக் கற்றுத் தேர்ந்து அதில் வல்லவனானான் அந்தப் பையன். ஆனால் அதற்கு முன்பே அவன் கற்றுக் கொண்டிருந்தது **'எப்போதும் சோம்பி இருக்காதே'** என்ற மந்திரம். இந்த மந்திரத்தினால் மிக உயர்ந்த மனிதனாக மாறினான் இந்தப் பையன். இவன் யார் என்று தெரியுமா உங்களுக்கு?

உழைப்பாளிகளுக்கு உதவும் ஆண்டவனுடைய அற்புதமான அருளினால் பல நவீன கண்டு பிடிப்புக்களை உலகுக்கு அளித்த **தாமஸ் ஆல்வா எடிசன்** தான் இவன்.

ஸ்விட்சைப் போட்டால் 'பளிச்' சென்று ஒளி வீசுகிறதே மின்விளக்கு' இதைக் கண்டவர் எடிசன். தந்தியை அனுப்பவும் பெறவுமான (Telegraph Transmitter and Receiver) நவீன முறையைக் கண்டவர். டெலிபோனில் கரியைப் பயன்படுத்தி (Carbon transmitter) கேட்பதைத் துல்லியமாக்கியவர். போனோகிராஃப், மின்சார ரயில் வண்டி இப்படி இவர் கண்டு பிடிப்புக்கள் எத்தனை எத்தனையோ. இத்தனையையும் தாமஸ் எடிசன் சோம்பிக் கிடந்திருப்பாரானால் கண்டு பிடித்திருக்க முடியுமா? ஒரு விநாடியையும் வீணாக்காமல் சுறுசுறுப்பாக இருந்ததினால்தான் மிகப் பெரிய கண்டு பிடிப்பாளராக விளங்க முடிந்தது எடிசனால்.

தாமஸ் எடிசனின் வாழ்க்கை மிகவும் சுவையானது, சுறுசுறுப்புடையது. கோகுலத்தில் விரைவில் வரப் போகிறது.

# பெருமூச்சுவிடும் ராட்சதனை உருவாக்கியவர்

இன்று உலகெங்கும் போக்குவரத்துச் சாதனத்துக்கு இன்றியமையாததாக இருப்பது ரயில் வண்டிகள். 'லோகோ மோடிவ்' என்று அழைக்கப்படும் ரயில் போக்குவரத்தில் ரயில் எஞ்சினைக் கண்டு பிடித்தது யார், எப்போது, எப்படி? இன்று மின் விசையினாலும் அணுவிசையினாலும்— இயங்கும் ரயில்கள் இருந்தாலும் ஆதியில் ரயில் என்ஜின்கள் நீராவியினால் தான் இயங்கின. அந்த நீராவி யந்திரங்களைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் வாட் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இந்த நீராவி யந்திரத்தைக் கொண்டு லோகோமோடிவ்களை — ரயில் வண்டிகளை-உருவாக்கியவர் யார் என்று தெரியுமா? ரயில் வண்டிகள் பிறந்த கதை சுவையானது சுவாரஸ்யமானதும் கூட.








ரிச்சர்டு ட்ரிவெதிக் என்று ஒருவர். இங்கிலாந்தில் உள்ள கார்ன்வால் மாகாணத்தில் 1771ல் பிறந்தார். இவருடைய தகப்பனார் டால்கோத் வெள்ளியச் சுரங்கத்தின் மானேஜர். ட்ரிவெதிக் சின்னப் பையனாக இருக்கும்போதே ஏதாவது புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்து புகழ் பெற வேண்டுமென்று விரும்பினார். பள்ளிப் படிப்பில் அதிக ஈடுபாடு காட்டவில்லை. யந்திரங்களை அமைப்பதிலும் அதன் நுணுக்கங்களை அறிவதிலும் ஆசை கொண்டவராக விளங்கினார். குமாஸ்தா உத்தியோகம் பார்க்கவோ பெரிய அறிவாளியாகவோ விரும்பவில்லை. சுரங்க என்ஜினியராகத் தேர்ச்சி பெற்றார்.


சுரங்கங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரைப் 'பம்ப்' செய்து வெளியேற்றும் நீராவி யந்திரங்களில் நல்ல அனுபவம் பெற்றவரானார் ட்ரிவெதிக். எந்தச் சுரங்கத்திலாவது ஏதாவது ஒரு நீராவி யந்திரத்தில் கோளாறு என்றால் ட்ரிவெதிக்கைத்தான் கூப்பிடுவார்கள். அந்த அளவுக்கு நீர் இறைக்கும் நீராவி யந்திரங்களில் அனுபவ அறிவுடையவராக விளங்கினார் ரிச்சர்ட் ட்ரிவெதிக்.

இளைஞரான ட்ரிவெதிக் மிகுந்த பலசாலியாகவும் விளங்கினார். நல்ல உடற்கட்டு. மற்போரில் வல்லவர். யாருமே சண்டையில் அவரை ஜெயிக்க முடியாது. மாதா கோயில் கோபுரத்துக்கு மேலாகப் போகும்படி கல் வீச முடியுமா என்று தோழர்கள் சவால் விடுவார்கள். ட்ரிவெதிக் வீசிக் காட்டி வெற்றி பெறுவார். இதெல்லாம் அவருடைய பொழுது போக்குகள் தான். டிரிவெதிக்கின் எண்ணமெல்லாம் வாட்











டின் நீராவி யந்திரத்தில் ஏதாவது முன்னேற்றங்களைச் செய்து சுரங்கங்களில் அது இன்னும் நல்ல முறையில் பயன்படச் செய்ய வேண்டுமென்பதிலேயே இருந்தது. அப்போதிருந்த நீராவி யந்திரங்கள் குறைவான அழுத்தமுடையவை. (*Low pressure*) இதை உச்ச அழுத்தமுடையவையாக (*High pressure*) மாற்றினார். இதை வயல், சுரங்கம் எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லும்படியாகவும், (*Portable*) அமைத்தார். இவ்வியந்திரத்தை ஒரு வண்டியில்ஏற்றிக்கொண்டு போய் விடலாம்.





'ஒரு நீராவி யந்திரத்தை உருவாக்க வேண்டும். அது தானாகவே நகர்ந்து செல்ல வேண்டும்' என்பதுதான் ட்ரிவெதிக்கின் கனவு. அதே சிந்தனையாகச் செயல்பட்டவர் அப்படியொரு ஒரு யந்திரத்தை உருவாக்கினார். அதை 1801ம் ஆண்டு கார்ன்வால் வீதிகளில் ஓட்டவும் செய்தார். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக ஏதோ கோளாறினால் அந்த யந்திரம் ஒரு திருப்பத்தில் தீப்பிடித்துப் பாழாகியது. (அப்படி வீதியில் ஓடிய அந்த முதல் நீராவி யந்திரத்தின் அமைப்பு எப்படிப்பட்டதென்பதற்கு எவ்விதச் சான்றுகளும் இல்லை. இங்குள்ள படம் அது ஓடியபோது பார்த்தவர்களின் நினைவிலிருந்து ஒருவாறு ஊகித்து எழுதப்பட்டதுதான்.)

இதனால் ட்ரிவெதிக் தளர்ச்சியடையவில்லை. இன்னொரு யந்திரத்தை உருவாக்கினார். அது இயங்கும் முறையைத் தன் நண்பர்களுக்குக் காட்டினார். அவர்கள் அதை ஒரு விளையாட்டுப் பொம்மை என்றார்கள். விடாமுயற்சியுடைய ட்ரிவெதிக் தன்னுடைய கண்டுபிடிப்பு வெறும் விளையாட்டுப் பொம்மையல்ல என்பதை நிரூபித்துக் காட்டினார். 1803ம் ஆண்டு தான் தயாரித்த யந்திரத்தை வீதியில் ஓட்டிக் காட்டினார். பிரயாணிகளை இழுத்துச் சென்ற முதல் நீராவி யந்திர வண்டியின் தோற்றம் இதுதான். வீதியிலே இது 'குப்குப்' என்று பெருமூச்சு விட்டபடி தானாக இயங்கி ஓடுவதைக் கண்ட பாமர மக்கள் 'பஃபிங் டெவில்' (*Puffing Devil*) என்று கூவியபடி ஓடி ஒளிந்தார்கள். ட்ரிவெதிக்கின் இந்த நீராவி யந்திரத்தின் வேகம் மணிக்கு எட்டு முதல் ஒன்பது மைல்கள் ட்ரிவெதிக்கின் புதிய (கண்டுபிடிப்பினால்) வண்டியினால் குதிரை வண்டிக்காரர்கள் கோபமடைந்தார்கள். 'இந்த ட்ரிவெதிக் நம் வாழ்வை நாசமாக்கத் தோன்றியிருக்கிறான். இவனைச் செயல்பட விடாமல் தடுத்து நிறுத்த வேண்டும்' என்று கட்சி கட்டலானார்கள்.


ரயில்வே லோகோமோட்டிவ்களைக் கண்டுபிடித்தவர் என்ற பெருமை ட்ரி










வெதிக்குக் கிடைக்கவில்லைதான். ஆனு லும் அத்தகையதோர் வண்டியை முதன் முதலில் உருவாக்கியவர் நிச்சய மாக ட்ரிவெதிக்தான். 1804ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ந் தேதி தென் வேல் ஸில் நீராவி யந்திரத்தினுல் சாமான் களையும் பிரயாணிகளையும் இழுத்துச் செல்லலாம் என் பதை நிரூபித்துக் காட்டினுர் பத்து டன் இரும்புக் கட்டை.. களையும் எழுபது உல் லாசப் பயணிகளையும் ஒன்பது மைல் தூரத் துக்கு இழுத்துச் சென் றது ட்ரிவெதிக்கின் முதல் ரயில் வண்டி. அடுத்த சோதனைகளில் இருபது டன் இரும்




பைச் சுமந்து சென்றது. இன்று போல அன்று தண்டவாளங்கள் கிடையாது. இரும்புத் தகடு பரப்பிய பாதை. லோகோமோட்டிவின் கனம் தாங்காமல் இந்தத் தகட்டுப் பாதை பழுது பட்டது. இந்த ரயில் பாதையின் சொந்தக் காரர்கள் இதைப் பழுது பார்ப்பதற்கு ஆகும் செலவைக் கணக்கிட்டுப் பயந்து இந்தப் பாதையை மூடி விட்டார்கள்.

இதன் பிறகு ட்ரிவெதிக் 'முடியு மானுல் என்னைப் பிடியுங்கள்' (Catch me who can) என்ற பெயரில் ஒரு ரயில் யந்திரத்தை உருவாக்கி வட்ட வடிவில் ஒரு பாதையை அமைத்து அதில் அந்த வண்டியை ஓட்டிக் காட்சி சாலை போல ஒரு சுற்றுக்கு ஒரு ஷில்லிங் என்று வசூல் செய்து ஓட்டினுர். தைரிய



முள்ள பொதுமக்கள் பலர் (நீராவி வண்டியில் ஏறிச் செல்ல அந்தக் கால மக்கள் பயந்தார்கள்!) காசு கொடுத்து இந்தக் காட்சி வண்டியில் சவாரிசெய்து மகிழ்ந்தார்கள். ஆனுல் ட்ரிவெதிக் கின் ஆர்வத்துக்கு ஊக்கம் அளித்து உற்சாகப்படுத்துவோர் யாரு மில்லை. பிரிட்டிஷ் தொழிலதிபர்கள் நீராவி லோகோ மோடிவ்களிடமோ நீராவி ரதா வண்டிகளிடமோ ஆர்வம் காட்







டாததால் இங்கிலாந்தை விட்டே வெளியேறிவிட முடிவு செய்தார். சுரங்க இயலில் வல்லுனரான அவரைத் தென் அமெரிக்கா இரு கரம் நீட்டி அழைத்தது. ட்ரிவெதிக்கின் யந்திரங்களைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். அங்குள்ள தகரம், வெள்ளியச் சுரங்கங்களுக்கு ட்ரிவெதிக்கின் யந்திரங்கள் தேவைப்பட்டன...

1816ம் ஆண்டு அக்டோபரில் ட்ரிவெதிக் தென் அமெரிக்காவில் உள்ள பெரு நாட்டுக்குப் பயணமானார். அங்குள்ள சுரங்கங்களுக்குப் பயணம் செய்வது மிகக் கடினமான அனுபவம். ஆனால் நல்ல பலசாலியான ட்ரிவெதிக்கினால்தான் அது சாத்தியப்பட்டது. அங்குள்ள சுரங்கங்களுக்கு நீராவி யந்திரங்களை அமைத்துக் கொடுத்தார். இவருடைய யந்திரங்களினால் அந்தச் சுரங்க முதலாளிகளுக்குப் பல லட்சம் பெசாக்கள் (அந்த நாட்டு நாணயம்) லாபம் கிடைத்தது. ஆனால் ட்ரிவெதிக்கின் துரதிர்ஷ்டம் அவரைத்-தொடர்ந்து வந்தது.

தென் அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் மூண்டது. புரட்சியாளர்களின் கை ஓங்கியது. முதலாளிகளின் சுரங்கங்களைப் புரட்சியாளர்கள் அடித்து நொறுக்கித் தீவைத்துக் கொளுத்தி நாசமாக்கினார்கள். ஆனாலும் கையில் திறமையும் உள்ளத்தில் துணிச்சலும் இருந்ததினால் மத்திய அமெரிக்கா முழுவதும் பிரயாணம் செய்தார் ட்ரிவெதிக். எங்கு சுரங்கமிருந்தாலும் அங்கு போனார். இந்தப் பிரயாணத்தில் எவ்வளவோ சாகசங்கள், அனுபவங்கள். ஆனால் ட்ரிவெதிக்கின் கனவு அங்கு நனவாக வழியில்லாமல் போகவே தாய் நாடு திரும்பினார்.

தன்னையும் தன்னுடைய யந்திரத்தையும் மக்கள் மறந்துவிடவில்லை என்




பதைக் கண்டார் ட்ரிவெதிக். நீராவி லோகோமோடிவ்களை ஏற்றுக் கொண்டிருந்தது இங்கிலாந்து. தன்னுடைய முயற்சியின் நினைவாக முன்னேற்றம் கண்ட இந்தப் புதிய அமைப்புக்காகத் தனக்கு உதவிப் பணம் (பென்ஷன்) வழங்க வேண்டுமென்று பார்லிமெண்டுக்கு மனுச் செய்து கொண்டார். ஆனால் அது நிராகரிக்கப்பட்டது.

ஹாலந்து நாட்டினர் ட்ரிவெதிக்கை அழைத்தார்கள். கடல் மட்டத்துக்குக்




சூழுள்ள அந்த நாட்டில் ரஸ்தாக்கள் எல்லாம் நீர் மார்க்கம்தான். 'நகரைச் சூழ்ந்துள்ள நீரை யந்திரம் கொண்டு வெளியேற்ற முடியுமா?' என்று கேட்டார்கள் டேனிஷ்காரர்கள். 'எல்லா நீரையும் 'பம்ப்' செய்து அகற்றும் ஓர் அமைப்பை என்னால் உருவாக்கித் தர முடியும்' என்றார் ட்ரிவெதிக். அவர் கொடுத்த திட்டத்தை நிறைவேற்ற நிதி உதவி செய்யும் கமிட்டியில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. ட்ரிவெதிக்கின் திட்டத்தைக் கமிட்டியின் ஒரு சாரார் ஏற்கவில்லை. மனமுடைந்து போன ட்ரிவெதிக் மறுபடியும் இங்கிலாந்து திரும்பினார். (ஆனால் பல வருஷங்களுக்குப் பிறகு ட்ரிவெதிக் கூறிய அமைப்புப்படியே தயாரிக்கப்பட்ட யந்திரம் ஹாலந்தின் ஹார்லம் ஏரியின் நீரை யெல்லாம் 'பம்ப்' செய்து அப்புறப்படுத்தியது.)

வேலை ஏதுமில்லை. ட்ரிவெதிக் என்ற ஒரு மனிதரையே நாளடைவில் எல்லோரும் மறந்துவிட்டார்கள். இங்கிலாந்து அரசும் புதுமை காணப் பாடுபட்ட ஒருவருக்கு உதவிப் பணம் தர மறுத்துவிட்டது. பின்னால் பிரபலமான ரயில் வண்டியை உருவாக்கியவர் தம்முடைய நிறுவனத்தில் ட்ரிவெதிக்குக்கு வேலை கொடுத்து உதவ முன்வந்தார். ஏனென்றால் ட்ரிவெதிக்கினுடைய யந்திரத்தின் அடிப்படையிலேதான் இவர் தம் புதிய யந்திரத்தை உரிய மாற்றங்களுடன் உருவாக்கி இருந்தார், அந்த நன்றிக்கடனுக்காக. ஆனால் ட்ரிவெதிக் முதலில் சம்மதித்தாலும் பிறகு அங்கு வேலை செய்யவில்லை. வறுமை வேதனை இவைகளே அவருக்குக் கிடைத்த பரிசுகள். 1833ம் ஆண்டு ஏப்ரல் 22ந் தேதி ரிச்சர்டு ட்ரிவெதிக் இவ்வுலகை விட்டு மறைந்தார். ஆனாலும் இன்று உலகில் மூலை முடுக்குகளிலெல்லாம் ஓடிக்கொண்டிருக்கும் ரயில்கள் அவருடைய நினைவுச் சின்னங்களே !

– விகேயெம்

**(இன்றைய ரயில் வண்டியைக் கண்டு பிடித்த பெருமை யாருக்குக் கிடைத்தது? அவரைப்பற்றி வரும் கோகுலம் இதழ்களில் படிக்கப் போகிறீர்கள்.)**





# கண்ணன் விளையாட்டு

தந்தையின் கைகளில் சின்னக்கண்ணன் — கொஞ்சித்
　　தந்தைக் கிளிமொழி பேசலுற்றான்
நந்த கோபரந்தப் பேச்சினிலே — இந்த
　　நானிலம் மறந்து ஈடுபட்டார்!

'ஞானிகள் நெஞ்சுபோல் நிர்மலமாய் — மேலே
　　நீலமாய் உள்ளது என்ன'வென்றான்
'வானமென அதைச் சொல்லிடுவார் — இந்த
　　வையத்தார்' என்றனர் நந்தகோபர்!

வானத்தில் பந்தென்ன என்றதுமே — அது
　　வட்ட நிலவென்று தானுரைத்தார்
வேணும் எனக்கது என்றழுதான் — மிக
　　வேதனை யாயிற்று காரியமே!

'வெம்புலி கேட்பினும் தந்திடுவேன் — ஒரு
　　வேட்டையில் ஆகிடும் அச்செயலே!
அம்புலிக்கு நானும் போவதெங்கே? — இது
　　ஆகாத காரியம் ஆகையினால்,

வாவெனச் சொல்லுநீ சின்னக்கண்ணா — அது
　　வந்துவிட் டாலுனக்காச்சு' என்றார்
வாவெனக் கூறினன் கண்ணபிரான் — நிலா
　　வந்தது கண்ணனின் கைகளிலே!

கண்ணன் முகமொரு தண்ணிலவு — அவன்
　　கைகளில் இன்னொரு வெண்ணிலவு!
என்ன அதிசயம் இன்னதென்று — தந்தை
　　கண்கள் இமைக்காது கண்டிருந்தார்!


காற்றும் நின்றது ஓர்கணமே — சூழல்
　　காசினி நின்றது ஓர்கணமே!
போற்றினர் தேவர்கள் விண்ணகத்தில் — புதுப்
　　பூக்கள் உதிர்ந்தன கண்ணனின்மேல்!

காட்சி மறைந்தது கனவினைப் போல் — நந்த
　　கோபர் திகைத்து விழித்திருந்தார்
வாட்டம் மிகுந்த முகத்துடனே — கண்ணன்
　　வயிறு பசிக்குது என்றுரைத்தான்!

ஆண்டவனைத் தினம் வேண்டிநின்றால் — நாம்
　　அரிய முயற்சியும் செய்துவந்தால்
வேண்டுதல்கள் அவன் கேட்டிருப்பான் — நம்
　　வேதனை யாவுமே தீருமம்மா!

சு. கிருஷ்ணன்

# ஏமாறாதே! ஏமாற்றாதே!



நெல்லை ஜெயம்

கண்ணனின் மனதில் ஏன்தான் அந்த விபரீத ஆசை எழுந்ததோ தெரியவில்லை ஆனால் நிமிடத்துக்கு நிமிடம் அது வலுப் பெற்றுக் கொண்டிருந்தது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை.

காலையில் பள்ளிக்கூட நேரத்துக்கு முன்பே வந்து விட்டான் கண்ணன். வகுப்பறையில் ஒரு பக்கத்தில் அவனுக்கு முன்னதாகவே வந்து விட்ட முருகன், சோமு, நமச்சிவாயம் ஆகிய சக மாணவர்கள் ஏதோ சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பேச்சின் சுவாரசியத்தில் கவரப்பட்ட கண்ணன் தானும் கலந்து கொள்ளும் பொருட்டு அவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

சோமு முன் தினம் மாலை தன் அம்மாவுடன் சேர்ந்து அன்றுதான் வெளியாகியிருந்த சினிமாவைப் பார்த்த கதையையும் அந்தச் சினிமாவில் கதாநாயகனாக நடித்திருந்த நடிகரின் டார்ஜான் வேலைகளையும் படத்தில் வரும் ஒரு குரங்கு செய்யும் அற்புத வேலைகளையும் மிகவும் சுவாரஸ்யமாக விமரிசித்துக் கொண்டிருந்தான்.

அதைக் கேட்டதிலிருந்து அந்தத் திரைப் படத்தை எப்படியும் பார்த்து விடவேண்டும் என்ற துடிப்பு எழுந்தது கண்ணனுக்கு. கதாநாயகன் டார்ஜான் வேலைகளை விடக் குரங்கின் குறும்புச் செயல்களைச் சோமு விவரித்ததிலிருந்து எப்படியும் தானும் அந்தப் படத்தை ஒரு தடவையாவது பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் படிப்படியாய் கூடிக் கொண்டிருந்தது.

வீட்டில் சாப்பாட்டுத் தட்டுக்கு முன் அமர்ந்திருந்த கண்ணன் எப்படி அந்தத் திரைப்படத்தைப் பார்ப்பது என்பதிலே தீவிர சிந்தனையாயிருந்தான். வழக்கமாகக் கலகலப்பாய்ச் சாப்பிடும் கண்ணன் இன்று மட்டும் அமைதியாகவும், கவலையோடும் காணப்படுவதைக் கண்ட அவன் அம்மா, ''ஏண்டா கண்ணு, குழம்பு நன்னாயில்லையா?'' என்றாள்.

''நன்னாயிருக்கும்மா.''

''பின் ஏன் கண்ணன் சோர்வாய் இருக்கிறான்?'' சிந்தித்தபடியே அவனருகில் வந்து அமர்ந்து கொண்ட அம்மா கண்ணனைப் பார்த்து,

''ஏன்? வகுப்பில் தப்பு ஏதும் செய்தாயா? வாத்தியார் சத்தம் போட்டாரா?'' என்று கேட்டாள்.

''இல்லை...'' என்பது போல் தலையசைத்த கண்ணன் மறு நிமிடமே ''ஆமாம் அம்மா!'' என்றான்.

''ஏன்? நல்லாப் படிக்கலை என்பதற்காகவா?'' அம்மாதான் மீண்டும் கேட்டாள்.

''....இல்லை.... ஆமாம்...''

''என்னடா உளர்றே! ஒழுங்காகச் சொல். எதற்கு ஆசிரியர் உன்மேல் கோபப்பட்டார்?''

''இல்லை.... ஆமாம்.... அம்மா... வந்து... வந்து'' கண்ணன் தயங்கினான்.

''சொல்லுடா. அம்மாதானே கேட்கிறேன். சும்மா தயங்காமல் சொல்'' அம்மா அன்புடன் கூறினாள்.

''...வந்து... ஒன்றுமில்லை அம்மா... போன வாரமே ஆசிரியர் எல்லா மாணவர்களையும் கிளாஸ் ஃபண்டுக்காக... பிரம்பு, சீப்பு, கண்ணாடி, தண்ணீர்ப் பானை-டம்ளர் எல்லாம் வாங்கணுமாம்- அதுக்கு ஒரு ரூபா கொண்டு வந்து தரச் சொன்னார். எல்லாரும் தந்துட்டாங்க. நான்தான் தரலை. அப்பா கிட்டச்




சொல்ல மறந்துட்டேன். வாத்தியார் மதியம் கொண்டு வரச் சொல்லியிருக்கார்... அதுதான்...'' கண்ணன் தயங்கித் தயங்கிச் சொன்னான்.

அம்மா கலகலவென்று சிரித்துவிட்டாள் கண்ணனின் தயக்கத்தைக்கண்டு. கண்ணன்மீது அவளுக்கு முழுநம்பிக்கை மற்ற மாணவர்களைப் போல் கண்ணன் ஒன்றும் மோசமில்லை. பொய் சொல்ல மாட்டான், கெட்ட வழிகளில் நடக்க மாட்டான். நன்றாகப் படிக்கக் கூடியவன். எனவே கண்ணன் கூறியதை உண்மை என்றே நம்பினாள்..

கண்ணனுக்கு ஆச்சரியமாக இருந்தது 'தனக்குக் கூட இவ்வளவு அருமையாய் பொய் சொல்லத் தெரிகிறதே!' என்று.

வழக்கம் போல் கையில் புத்தகங்களை எடுத்துக் கொண்டான் கண்ணன். மனம் மட்டும் 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. கடுகு டப்பாவில் போட்டு வைத்திருந்த சில்லறைகளை எண்ணி சரியாக ஒரு ரூபாயாகக் கண்ணனிடம் தந்தாள் அம்மா. அதை வாங்கிப் பத்திரமாகத் தன் ட்ரௌசர் பாக்கெட்டில் வைத்துக் கொண்ட கண்ணன் '' அம்மா ! ஸ்கூலுக்குப் போயிட்டு வரேன்'' என்று கூவிக் கிளம்பினான்.

குறிப்பிட்ட அந்தத் திரைப் படம் நடக்கும் தியேட்டரை நோக்கி நடக்க ஆரம்பித்தான் கண்ணன்.

வெயில் தீயாகக் கொளுத்தியது. தியேட்டரை அடைந்த கண்ணனுக்கு அடுத்து என்ன செய்வது என்று புரியவில்லை. ''படம் இரண்டரைக்குத்தான்— டிக்கட் இரண்டு மணிக்குத்தான் தருவாங்க'' அங்கே நின்றுகொண்டிருந்த ஒருவர் கண்ணனிடம் கூறினார்.

'அதுவரை என்ன செய்வது? தெரிந்தவர்கள் யாராவது பார்த்து அப்பா—அம்மாவிடம் சொல்லி விட்டால்?'

இதுவரை மறைந்திருந்த பயம் இப்போது தலை தூக்கியது.

மனம் அடித்துக் கொண்டது. சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தான். நல்ல வேளை, தெரிந்த முகம் எதுவும் கண்ணில் படவில்லை. ஒரு மரத்தின் ஓரத்தில் கிடந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டான்.

''வை ராஜா வை; இதிலே வை; அதிலே வை; எதிலே வேணும்னாலும் வை; படம் பார்த்து வை; அடிச்சா உனக்கு; இல்லாட்டி எனக்கு...''

கண்ணன் அமர்ந்திருந்த இடத்திலிருந்து சற்றுத் தள்ளி ஒரு கும்பல் நின்று கொண்டிருந்தது. அதில் ஒருவன் கீழே குந்தியிருந்தான். அவன் கையில் மூன்று சீட்டுக்கள் இருந்தன. அதில் ஒன்று மட்டும் படம்; மற்றவை இரண்டும் நம்பர்கள். அவன்தான் மேலே சொன்னபடி கூவிக் கொண்டிருந்தான்.

அவன் சீட்டுக்களைக் கலைப்பதும் மாற்றி வைப்பதுமே தனி அழகாகத் தெரிந்தது கண்ணனுக்கு. அவன் அது வரை அது போன்ற மூன்று சீட்டு விளையாட்டுக்களைப் பார்த்ததில்லை. அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. ஆகையால் எழுந்து அந்தக் கும்பலை நோக்கிச் சென்றான்.

பக்கத்தில் சென்றதும்தான் தெரிந்தது. அது பணம் வைத்து விளையாடும் விளையாட்டு என்று.

''நாலணா வைத்தால் எட்டணா.... எட்டணா வைத்தால் ஒரு ரூபாய். ஒன்றுக்கு ரெண்டு—அடிச்சா டபுள்...! அது மேலே வை....'' சீட்டைக் கலைத்துக் கொண்டே சப்தம் போட்டுக் கொண்டிருந்தான் உட்கார்ந்திருந்தவன்.

கண்ணனுக்கு இப்போழுது விளையாட்டுப் புரிந்து விட்டது. அந்த மூன்று சீட்டில் படம் உள்ள சீட்டில் பணத்தைச் சரியாக வைத்து விட்டால் ஒன்றுக்கு இரண்டாகக் கிடைக்கும்.

கண்ணனின் மனத்தில் ஆசை உருவாகியது. ''நாலணா வைத்துப் பார்ப்போமே...'' ஜேபியில் கை விட்டு நாலணாவை எடுத்து மத்தியில் இருந்த சீட்டின் மேல் வைத்தான். என்ன ஆச்சரியம்! அவன் காசு வைத்த சீட்டில்தான் படம் இருந்தது. சீட்டு விளையாடிக் கொண்டிருந்தவன் முழு ஐம்பது காசு நாணயத்தை எடுத்துக் கண்ணனிடம் தந்தான். கண்ணனுக்குப் பெருமை பிடிபடவில்லை. அதோடு அந்தச் சின்னஞ் சிறு உள்ளத்தில் ஆசையும் அதிகமாகியது.

கண்ணனின் மனத்தை அறிந்தவனைப் போல் சீட்டைக் கலைத்தவாறே, ''தம்பி, அதிர்ஷ்டம் இப்ப உன் பக்கம். வைச்சு விளையாடு — டபுள் டபுளாக் கிடைக்கும்!'' என்றான் விளையாடுபவன்.

கண்ணனுக்கும் அது சரி யென்றே பட்டது. கையிலிருக்கும் ஒரு ரூபாயையும் வைத்தால் இரண்டு ரூபாய் கிடைக்கும். அதில் சினிமாச் செலவுக்குப் போக ஒரு ரூபாய் மீதி இருக்கும். பொய் சொல்லி அம்மாவிடம் வாங்கியதைத் திருப்பித் தந்துவிடலாம். அம்மாவும் தன் சாமர்த்தியத்தை மெச்சி மன்னித்து விடுவாள்....'' இவ்விதம் அந்தப் பிஞ்சு உள்ளம் கணக்கிட்டது.

ட்ரௌஸர் பாக்கெட்டில் கைவிட்டு இருந்த பணத்தை முழுவதும் எடுத்தான். கலைத்துப் பரப்பப்பட்ட சீட்டில் முதலில் இருந்த சீட்டின் மேல் அவ்வளவையும் வைத்தான். சீட்டுக்காரன் அந்த இடத்தில்தான் படம் உள்ள சீட்டை வைப்பது போல 'டிரிக்' செய்திருந்தான். பணம் வைத்த பிறகு சீட்டைத் திருப்பினான் 'ஐயையோ! அதில் படமில்லையே' போச்சு, அத்தனை பணமும் அவன் கைக்குப் போய் விட்டது.

ஏமாந்து விட்டதை அறிந்தபோது கண்ணனின் மனம் சங்கடப்பட்டது.. போதாக் குறைக்குச் சீட்டுக்காரன் வேறு ''தம்பி, காசு வைத்திருந்தால் விளையாடு... இல்லை வெட்டிக் கூட்டம் எதற்கு? விலகு'' என்றான் தன் கரகரத்த குரலில்.

ஆசையினால் தான் ஏமாந்து விட்டதைத் தாங்க முடியாத கண்ணன் இப்பொழுது ''ஓ''வென்று விசித்து விசித்து அழ ஆரம்பித்தான்.

அதுவரையில் கண்ணனையே தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்த ஒரு பெரியவர் அவன் அருகில் சென்று நடந்ததைக் கேட்டறிந்தார். பின் கண்ணனுக்கு நல்ல புத்தி கூறி ''வீட்டுக்குச் சென்று உன் அம்மாவிடம் மன்னிப்புக் கேள்'' என்றார்.

கண்ணன் அவருக்கு நன்றி கூறிவிட்டு தன் அம்மாவிடம் மன்னிப்புக் கேட்பதற்காக ஓடினான்.

தெரு ஓரத்திலிருந்த டீக்கடையிலிருந்த ரேடியோ ஒன்று ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்தது:

**ஏமாறாதே ஏமாறாதே !**
**ஏமாற்றாதே ... ஏமாற்றாதே !**

கண்ணன் காதிலும் அந்தப் பாடல் விழுந்தது.



''ஒரு சர்க்கஸ் மானேஜரிடம் நிறையக் கறுப்புப் பணம் இருக்கிறது. ஆனால் யாரும் நெருங்க முடியாத இடத்தில் அதை வைத்திருக்கிறார்?''
'' அப்படிப்பட்ட இடம் எது ?''
''சிங்கத்தின் கூண்டினுள்!''
''ரொம்ப நாளாகவே உங்கள் மனைவி கையில் அகப் பட்டதையெல்லாம் என்மீது வீசி அடிக்கிறாள்''
'' இத்தனை நாளாக நீ ஏன் இதை என் னிடம் சொல்லவே இல்லை ?''
'' நேற்றுத்தானே அது என் மீது பட்டது !''
சிரிக்கச் சிரிக்க....
''ஏனப்பா நீ ஒரு சைக்கிள் வாங்கிக் கொள்வது தானே ?''
'' அந்த விலைக்கு ஒரு பசுமாடு வாங்கிக் கொள்ளலாமே !''
''மாட்டின் மீது உட்கார்ந்து சவாரி செய்ய முடியுமா?''
''சைக்கிளில் பால் கறக்க முடியுமா?''
எஜமானி: இப்படி நீ ஒவ்வொரு நாளும் பாத்திரங்களைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கிறாயே. உடைக்கும் பாத்திரங்களுக்கு உன் சம்பளத்தில் பிடித்தால் கூடக் கட்டுப்படியாகாது போலிருக்கே !
வேலைக்காரி: அதனால்தான் என் சம்பளத்தை அதிகமாக்குங்கள் என்று கேட்கிறேன்.
சாமா
''ஒரு கன்னத்தில் அடித்தால் இன்னொரு கன்னத்தைக் காட்டு என்பார்களே!''
''ஆமாம் அதற்கென்ன இப்போ ?''
''அவன் என் மூக்கிலே அடித்துவிட்டானே, என்ன செய்ய ?''
''என்ன படம்டா போட்டிருக்கே ?''
''சிங்கத்தின் படம்.''
''ரொம்ப மெலிஞ்சு இருக்கே ?''
''அது ஒரு நோயாளிச் சிங்கம் !''

# மூளைக்கு வேலை


## வேடிக்கை விளையாட்டு



▲ வீட்டுக்குப் போக வழி தெரியாமல் விழிக்கிறான் பையன். நான்கு சந்துகளில் எந்தச் சந்திலே புகுந்தால் தடுமாற்றமில்லாமல், தடங்கல்கள் இல்லாமல் வீட்டுக்குப் போகலாம் என்பதை அவனுக்குக் கொஞ்சம் சொல்லி உதவுங்களேன்!



▲ ஒரே எண் குவியல்களாக இருக்கிறதே என்று மலைக்கிறீர்களா? இதற்குள் ஏதோ ஒன்று ஒளிந்துகொண்டிருக்கிறது. அது என்ன என்பதைக் காண வேண்டுமானால் ஒன்றிலிருந்து இரண்டுக்கும் மூன்றுக்கும் அப்படியே அறுபத்தி ஒன்றுவரை இலக்கப் புள்ளிகளைப் பென்சிலால் கோடு இழுத்து ஒன்று சேருங்கள். ஒளிந்து கொண்டிருப்பது உங்கள் கண் முன்னே உருவாகி நிற்கும்.



◀ இங்குள்ள வட்டக் கோலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஜோடி உண்டு, ஒன்றே ஒன்றைத் தவிர. எந்தக் கோலமுள்ள வட்டத்துக்கு ஜோடி இல்லையென்பதைக் கண்டு பிடித்து அதைக் கீழே உள்ள காலி வட்டத்தில் வரைந்து பூர்த்தி செய்துகொண்டு பார்க்கலாம்.

(விடை : 7ம் எண்ணுள்ள வட்டக் கோலம்)



**1**
A B C E
G IJ L
O Q U
W X

**2**
D H J K
L N O R
T U W
X Y

**4**
E H I M
O P Q
R T U
V W

**8**
A C F
H K M
Q U X
Y Z

**16**
B C F
I J K
N O S
T V

# நினைத்திருப்பதைச் சொல்லலாம்

ஏதாவது ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள். அதை இதால் பெருக்குங்கள், கூட்டுங்கள், கழியுங்கள்' என்று கூறி முடிவில் 'நீங்கள் நினைத்துக் கொண்ட எண் இதுதானே?' என்று கூறும் விளையாட்டுக்கள் எவ்வளவோ உண்டு. கோகுலத்திலேயே அப்படிப் பல வந்திருக்கின்றன. ஆனால் ஒருவர் நினைத்துக் கொள்ளும் வார்த்தையைக் கூறும் 'டிரிக்' இது வரை வந்ததில்லை. இதோ அப்படியொரு வேடிக்கையான விளையாட்டு. ஆனால் ஆங்கில வார்த்தைகளில் தான் இந்த வேடிக்கையைச் செய்ய முடியும். இதற்கு விசேஷமான பயிற்சியோ ஆங்கில அறிவோ திறமையோ எதுவும் வேண்டாம்.

மூன்று எழுத்துக்கள் உள்ள ஏதாவது வார்த்தைகளை உங்கள் நண்பர்களை நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். *Cat, Mat, Cow, Toy,* இப்படி ஏதாவது. அதிக எழுத்துக்கள் உள்ள வார்த்தைகளையும்கூட நினைத்துக் கொள்ளலாம். ஆனால் பெரிய வார்த்தைகளைக் கண்டு பிடித்துச் சொல்ல அதிக நேரம் ஆகுமாதலால் மூன்று அல்லது ஐந்து எழுத்துக்கள் உள்ள வார்த்தைகளைக் கொண்டு விளையாடினால்தான் வேகமும் விறுவிறுப்பும் ஏற்படும்.

நினைத்துக் கொண்ட நண்பரிடம் அந்த வார்த்தையின் முதல் எழுத்து இங்கு இடப் பக்கத்தில் உள்ள படத்தில் எந்தெந்தச் சதுரங்களில் இருக்கிறதென்று கேளுங்கள். அதே மாதிரி இரண்டாவது எழுத்து மூன்றாவது எழுத்துக்களையும் எந்தெந்தச் சதுரங்களில் இருக்கிறதென்று கேளுங்கள். நண்பரின் பதில்களைக் கேட்டுக் கொண்ட நீங்கள் சில விநாடிகள் சிந்திப்பது போல் நடித்து அவர் நினைத்துக் கொண்ட வார்த்தையை 'டக்'கென்று கூறி விடலாம்.

**எப்படிக் கூற முடியும்?**

ஒவ்வொரு சதுரத்துக்கும் ஒவ்வொரு ரகசியக் குறி எண் உண்டு. இதை நீங்கள் மனனப்படுத்திக் கொள்ள வேண்டும். அது கஷ்டமான காரியமும் அல்ல. முதல் சதுரத்துக்கு என்ன மதிப்போ அதைப் போல் இருமடங்கு அடுத்த சதுரத்தின் மதிப்பு. முதல் சதுரத்தின் மதிப்பு **ஒன்று**. இரண்டாவதின் மதிப்பு **இரண்டு**. மூன்றாவதற்கு **நான்கு**. நான்காவதுக்கு **எட்டு**. ஐந்தாவதின் மதிப்பு **பதினாறு** — ரொம்ப ஸிம்பிள்!


நண்பர் நினைத்துள்ள வார்த்தையின் முதல் எழுத்துக்கள் உள்ள சதுரங்களைக் கூறியதும் அந்தச் சதுரங்களின் மதிப்பை மனத்துக்குள்ளேயே கூட்டுங்கள். வரும் கூட்டுத் தொகைக்கு வலப் பக்கத்தில் உள்ள அட்டவணையின்படி எந்த எழுத்து என்பதைப் பாருங்கள். உதாரணமாக உங்கள் நண்பர் நினைத்துக் கொண்ட வார்த்தை '*Cat*' என்றால் முதல் எழுத்து 'C' உள்ள சதுரங்கள் 1, 4, 5 — இல்லையா? இவைகளின் மதிப்பு 1 + 8 + 16 = 25. இருபத்தைந்துக்கு உரிய எழுத்து அட்டவணைப்படி 'C'. அடுத்து 'A'. இந்த எழுத்து உள்ள சதுரங்கள் 1ம் 4ம் — இதன் கூட்டுத் தொகை 1 + 8 = 9. ஒன்பதுக்கு உரிய எழுத்து 'A' என்பதை அட்டவணை கூறுகிறது. மூன்றாவது எழுத்து 'T'. இது உள்ள சதுரங்கள் 2, 3, 5 — கூட்டுத் தொகை 2 + 4 + 16 = 22. இருபத்திரண்டுக்கான எழுத்து 'T'தானே? உங்கள் நண்பர் நினைத்துக் கொண்ட வார்த்தை Cat. (பூனை) வேடிக்கையான இந்த விளையாட்டு எப்படி? உங்கள் நண்பர்கள் எத்தனை பெரிய வார்த்தையை நினைத்துக் கொண்டாலும் அதை நீங்கள் இந்த உங்கள் மந்திரசக்தியால்(?) அறிந்து கூறிவிடலாம்! சதுரங்களின் மதிப்பு நினைவிலிருக்கும். ஆனால் அட்டவணைகளை நினைவில் வைத்துக் கொள்ளுவது சற்றுக் கடினம். ஆகவே, அதை ஒரு காகிதத்தில் எழுதிக் கையில் வைத்துக் கொள்ளலாம். அதை உங்கள் நண்பர் பார்த்தாலும் ஏதும் புரியாது.


1=G
2=D
3=L
4=P
5=E
6=R
7=W
8=Z
9=A
10=Y
11=X
12=M
13=Q
14=H
15=U
16=S
17=B
18=N
19=J
20=V
21=I
22=T
23=O
24=F
25=C
26=K

# நந்து சுந்து மந்து (18)

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




செய்யாத ஒரு குற்றத்துக்காகத் தண்டனை அடைந்த நிரபராதி அவன். சிறையிலிருந்து தப்பி ஓடி வந்து விட்டவன். போலீஸ் அவனைத் தேடுகிறது.
இதுவகுளா நீ கொண்டு வந்திருக்காட்டா பசியால செத்தே போயிருப்பேன்.
மரியாதையாச் சரணடைந்து விடு. தப்பி ஓட முயற்சிக்காதே.
ஐயோ! இவரு எங்கே வந்தார்! அந்த டுமீல் டுமீல் குழாயைக் கண்டாலே எனக்கு நடுக்கந்தான்.
என் உயிரைக் காப்பாத்தின மனுஷனை நீ மிரட்டி பயமுறுத்தப் பாக்கறயா? நான் இருக்கிறவரை அது நடக்காதுப்பேன்! இந்தப் பறவைக் கூடு, முட்டையோட உன் தலையிலே தொபுகடீர்!
நண்பனே! உன் உணவுக்கும் உதவிக்கும் நன்றி. நான் வருகிறேன்
ஏய், நீ எங்கே போனாலும் தப்ப முடியாது. நினைவிருக்கட்டும்.
தன்னைக் காப்பாற்றியவனுக்கு உதவிய திருப்தியோடு, மங்கு தன் கூடாரத்துக்குத் திரும்பும்போது ஓநாய்களின் ஊளைக்குரல் கேட்டுத் திரும்புகிறது.
நல்லவேளை அந்தப் பயல் என் கால்களைக் கட்டவில்லை. இந்தா இதை வாங்கிக்கொள்.
மங்குவைத் தேடி நந்து சந்து அந்தப் பக்கம் வருகின்றனர். ஓநாய்களோடு போராடும் கான்ஸ்டபிளுக்கு உதவுகின்றனர்.
நல்லவேளை நம்ப நந்துவும் சந்துவும் வந்தாங்க. ஆரு துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய அவன் கட்டுக்களை அவிழ்த்து விடுதலை செய்யறாங்களே, இதென்னடா வம்பா இருக்கு?




# மலேசியா



**கிருஷ்ணவேணி**

பரமேசுவரத் தாத்தா ஓசைப்படாமல் உள்ளே நுழைந்தார். கிட்டுவும் பட்டுவும் அங்குதான் படுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தூங்கி விட்டார்களா என்று அருகில் போய்க் குனிந்து பார்த்தார். அவர் முகத்தில் ஒரு மலர்ச்சி. 'குழந்தைகள் தூங்கி விட்டன. நான் கிளம்புவதற்கு இதுதான் ஏற்ற சமயம்' என்று எண்ணியபடி ஒரு நைலான் பையில் தன்னுடைய துணிமணிகளையும் கம்பளிச் சால்வையையும் எடுத்துத் திணித்துக் கொண்டிருக்கும் போது அவருடைய தோள்களுக்கு மேலாக இரு தலைகள் வந்து பதிந்தன. திடுக்கிட்ட அதே சமயத்தில் ''தாத்தா! எங்களை ஏமாத்திட்டு எங்கே போகக் கிளம்பறீங்க?'' என்று கோரஸாக ஒலித்தன, கிட்டு பட்டுவின் குரல்கள்!

''நீங்கள் தூங்கலியா? பொல்லாத பசங்களா! தூங்குவது போலப் பாசாங்கு செய்து என்னை ஏமாத்திட்டீங்க, இல்லே?''


'' எங்களை ஏய்த்துவிட்டு எங்கோ போக நீங்க திட்டமிடலையா, அது போலத்தான். மலேஷியாவுக்குத்தானே பிரயாணம்?'' என்று கேட்டான், கிட்டு.

''இவ்வளவு கரெக்டாச் சொல்லிட்டியே, அதெப்படி?'' என்றார் தாத்தா வியப்புடன்.

''கோகிலகான இசைவாணி. சங்கீத கலாநிதி, இசைப் பேரறிஞர், சப்தகிரி சங்கீத வித்வாம்சினி– சங்கீத கலாசிகாமணி, ஸ்வர் விலாஸ், பத்ம விபூஷன்....''

''ஏய், ஏய்.... நிறுத்து, நிறுத்து! இந்தப் பட்டங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர், பாரதம் பெருமைப்படத்தக்க ஒரு பிரஜை அவர் தெரியுமா?''

''தெரியுமே. 'பட்டம் பதவி பெறப் பாடவில்லை நான்' என்று எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே பாடியவராயிற்றே. அப்படிப்பட்ட ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் மலேசிய மக்களுக்கு இசை விருந்து அளிப்பதற்காக







மலேசியா போகிறாரே. அவருடைய பாட்டென்றால் உங்களுக்கு உயிராயிற்றே. உலகத்தின் எந்த மூலையில் அவர் கச்சேரி செய்தாலும் போய்விட மாட்டீர்களா?''

'' ஏன் நீங்கள் மட்டும் என்னவாம்? ரேடியோவில் எம். எஸ். பிளேட் வைத்தால்கூடப் பாடப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு ஓடி வந்து ரேடியோப் பெட்டியைச் சூழ்ந்து கொள்ளுவீர்களே!'' என்றார் தாத்தா.

''அதனால்தான் எங்களையும் உங்களோடு மலேசியாவுக்கு அழைத்துப் போகச் சொல்லுகிறோம்'' என்றான் கிட்டு.

''மலேயா வேறு, மலேசியா வேறா தாத்தா?'' இப்படியொரு சந்தேகத்தைக் கிளப்பினாள் பட்டு.

'' ஐயே, இது கூடத் தெரியாம நீ என்ன சரித்திரமும் பூகோளமும் படிக்கிறே?'' என்று கிண்டல் செய்தான் கிட்டு. பிறகு, ''பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திலிருந்த மலேயா 1957 ஆகஸ்டில் சுதந்திரம் அடைந்தது. மலேயா என்பது அப்போது ஒன்பது மாகாணங்களைக் கொண்ட ஒரு நாடு. மலேயா தீபகற்பத்தின் முனையில் உள்ளதுதான் சிங்கப்பூர் தீவு. இந்தத் தீவு முன்பு தனித்து இயங்கியது. இப்போது மலேசியாவின் ஒரு மாகாணமாகிவிட்டது. அது சரி மலேயா எங்கே இருக்கிறது என்பது தெரியுமா உனக்கு?'' என்று கேட்டான் கிட்டு.

''இது தெரியாதாக்கும். ஆசியாவின் தென் கிழக்கு மூலையில், தாய்லாந்து நாட்டை ஒட்டியுள்ள விளிம்பில் இருப்பதுதான் மலேயா'' என்றாள் பட்டு.

''பலே!'' என்று பாராட்டிய கிட்டு ''57ல் சுதந்திரம் அடைந்த மலேயா நாட்டோடு 1963ல் சாரவாக், வடக்கு போர்னியோவான சாபா, சிங்கப்பூர் இவையெல்லாம் இணைந்தன. அப்போது மலேயா பெடரேஷன் என்பது மலேசியா பெடரேஷனாயிற்று. மலேயா மலேசியா ஆன கதை இதுதான்'' என்றான் கிட்டு. அவன் வரலாறு, புவி இயல் ஆகியவற்றில் புலியாயிற்றே.

''மலேசியா பற்றி இத்தனை தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாயே, போதாதா? உங்களுக்கு அரை வருஷப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கும் போது படிப்பை விட்டுவிட்டு என்னுடன் அங்கே கிளம்ப வேண்டுமா?'' என்றார் தாத்தா.

''ஏட்டுப் படிப்பு மட்டும் போதாது என்று நீங்கள்தானே கூறுவீர்கள்? மலேசியா பற்றி படித்தால் மட்டும் போதுமா? நேரிலேயே பார்த்தால் இன்னும் நன்றாக மனத்தில் பதியுமே!'' என்றான் கிட்டு விடாக் கண்டனாக.

அவர்களை விட்டுப் போக முடியாது என்று பரமேசுவரத் தாத்தாவுக்கும் தெரியும். ஆகவே மந்திர மெழுகுள்ள டப்பியைத் தம் இடையிலிருந்து எடுத்து இருவரின் புருவத்திலும் தடவினார். அடுத்த விநாடி மூவரும் மலேசியாவின் 'சுங்கே பஸார்' என்ற ஒரு கடற்கரையோரத்துக் கிரா

மத்தில் இருந்தனர். அப்போது விடியற் காலை மணி நான்கு.

"நாம் அதிகாலை வேளையில் வந்திருக்கிறோம். இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்தக் கிராம மக்கள் விழித்துக் கொண்டு விடுவார்கள். மீன் பிடிப்பது தான் இவர்களின் தொழில். யாரையும் இப்போது எழுப்பித் தொந்தரவு தர வேண்டாம். இரவு வேளைக் கடற்காற்று இங்கிதமாக வீசுகிறது பார். பின் நிலாக் காலமானதால் நிலவொளியில் அமைதியாக உறங்கும் ஊரின் மசூதி, புத்தர் கோயில் ஸ்தூபிகளின் பித்தளைக் கலசங்கள் பளபளக்கின்றன பார். இந்தக் கிராமத்தில் உள்ள இருநூறு குடிசை வீடுகளிலும் விளக்கு எரியவில்லை. சுங்கே பஸார் கிராமத்தின் மீனவக் குடும்பங்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றன."

"அதோ ஒரு வீட்டில் விளக்கு எரிகிறது, தாத்தா !" என்றான் கிட்டு. தாத்தா கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார்.

"ஆமாம், உண்மைதான். கடலுக்கு வெகு அருகாமையில் உள்ள அந்த வீடு, **இஞ்சே அவாங் பின் உஸ்மான்** என்ற மீனவரின் வீடு. அது மண்ணெண்ணெய் விளக்குத் தான். இங்கெல்லாம் மின்சார விளக்குகள் அதிகம் கிடையாது. இன்னும் சிறிது நேரத்தில் கடலில் மீன் பிடிக்கக் கிளம்பியாக வேண்டும். அதற்குத் தயார் செய்து கொண்டிருக்கிறான் போலும். அவன் மனைவியின் பெயர் **சே அவாங்**. இவர்களுக்கு **அஹமத், அலி** என்று இரு பையன்களும் **ஆயிதா, அமைனா, ருபையா** என்ற மூன்று பெண்களும் குழந்தைகள்."

"இவர்களை உங்களுக்கு முன்பே தெரியுமா தாத்தா ? பெயர்களைப் பார்த்தால் முஸ்லிம்கள் மாதிரி இருக்கிறதே !" என்றான்.

"மலேசியாவில் முஸ்லிம்கள் தான் அதிகம். ஆனால் இது ஒரு விசித்திரமான நாடு. இங்கு பல்வேறு இனத்தவர்கள் வாழ்கிறார்கள், ஒற்றுமையாக. மலாய்க்காரர்கள், சீனர், இந்தியர், சிங்களவர், யூரேஷியர்கள், மற்றும் இந்நாட்டின் பூர்வகுடிகள் இப்படிப் பல இனத்தவர். பல மொழிகள் பேசினாலும் மலாய் மொழிதான் தேசிய மொழி, அரசாங்க அலுவல்களுக்குப் பயன்படுவது ஆங்கிலம்.

"அஹமத், அலி இருவரையும் நான் சந்திக்க வேண்டும், தாத்தா" என்றான் கிட்டு ஆர்வமுடன்.

"அவசரப்படாதே. தூங்கும் அவர்களை இப்போது எழுப்ப வேண்டாம். முதலில் அவர்கள் வீட்டைப் பாருங்கள். மலேசியாவின் நாட்டுப்புறத்து வீடுகள் எல்லாமே அநேகமாக இது போலத்தான் இருக்கும். நீண்ட சதுர வடிவில், குட்டையாக எழுப்பிய தூண்களின் மீதாகக் கட்டப்பட்டிருக்கிறதில்லையா ? வீட்டுக்குக் கீழே குளிர் காற்று தாராளமாகப் போய்வர வசதியாக, தூண்களுக்கு மேலாக எழுப்பப்பட்டுள்ள மரத்தினாலான வீடு. கூரை '**நிபா**' என்ற ஒரு வகைப் பனை ஓலையினால் வேயப்பட்டிருக்கிறது. கீழிருந்து வீட்டுக்கு மேலாக ஒரு பக்கத்தில் ஏணி போன்ற படிக்கட்டுகள் இருக்கின்றன பார்த்தாயா ?

"வீட்டினுள் ஒரு பெரிய அறையை இரு பாகமாகத் தடுத்திருக்கிறார்கள் பார். அதன் ஒரு பகுதியில் சற்றே உயரமான ஓர் இடம். அங்குதான் அவாங் குடும்பத்தினர் அமர்ந்து சாப்பிடுவார்கள். தரையில் சம்மணமிட்டு உட்கார்ந்து கொள்ளுவார்கள். உயர்ந்த பகுதியில் உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து வைப்பார்கள். அவற்றிலிருந்து அவரவர் தங்களுக்கு வேண்டியதைக் கையால் எடுத்துச் சாப்பிடுவதுதான் இவர்கள் வழக்கம். தனித் தனியான தட்டு, பரிமாறல் இதெல்லாம் இங்கு கிடையாது. மற்றொரு பகுதியில் இரு சிறிய படுக்கை அறைகள் உள்ளன. ஒன்று அவாங் தம்பதிகளுடையது. மற்றது குழந்தைகளுடையது. வீட்டின் பின் பகுதியில் சிறிய சமையல் அறை. இதிலிருந்து கீழே இறங்கிப் போக முன்புறத்தைப் போலப் படிக்கட்டுகள் உண்டு. குளியல் அறையும் மற்றதும் தனியாக வெளியே.

"ஏன் தாத்தா நாம்பாட்டுக்கு இங்கே இஷ்டப்படி நுழைந்து பார்க்கிறோமே, நம்மை இவர்கள் பார்த்ததாகவே தெரியவில்லையே? அங்கே இஞ்சே அவாங் முகம் கழுவி உடை மாற்றிக் கொள்ளுகிறார். இங்கே சே அவாங் காலை ஆகாரம் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்."

தாத்தா சிரித்தார். "கிட்டு நாம் அவர்களின் கண்களுக்குத் தெரியமாட்டோம். மந்திர மெழுகின் மகத்துவம் அது. நாம் பேசுவதும் அவர்களுக்குக் கேட்காது....." என்றார்

"சமையல் அறையும் இதில் உள்ள சாமான்களும் நம் ஊர் போலவே இருக்கிறதே. கொட்டாங்கச்சி ஆப்பை, தேங்காய் திருகும் பலகை, அலுமினியப் பாத்திரம், சட்டி பானை எல்லாம் நம் ஊர் சமையல் அறைபோலவே!" என்று வியந்தாள் பட்டு. சே அவாங் தன் கணவனுக்குக் காலை உணவைத் தயா



ரித்து விட்டிருந்தாள். பால் இல்லாத சர்க்கரை சேர்ந்த கறுப்புக் காப்பி. மாவும், வாழைப் பழமும் கொண்டு தயாரிக்கப்பட்ட ஓர் உணவும்தான் அது. கணவனுக்கு அதிகாலையில் இப்படித் தயாரிப்பவர் மறுபடியும் தனக்கும் குழந்தைகளுக்கும் இன்னொரு தடவை காலை உணவைத் தயாரிப்பாள். அது தித்திப்பு இல்லாத பான் கேக், வெள்ளை ரொட்டி முதல் நாள் இரவு மீதம் வைத்துள்ள கறி. மலேசியர்களின் உணவில் கறி கட்டாயம் இருக்கும்'' என்று விளக்கினார் தாத்தா.

அப்போது இஞ்சே அவாங் நீல நிறமுள்ள ஒரு பாயை விரித்து அதில் முழந்தாளிட்டு மேற்கே பார்த்து அமர்ந்து கொண்டார். ''என்ன செய்யப் போகிறார் இவர்?'' என்று கிசுகிசுத்தான் பட்டு.

''அவாங் ஒரு முஸ்லிம். ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுகை நடத்துவது அவர்கள் வழக்கம். இது இன்றைய முதல் தொழுகை. மேற்கே உள்ள அவர்கள் புனித ஸ்தலமான மெக்காவை நோக்கி அமர்ந்து பிரார்த்தனை புரியப் போகிறார்'' என்றார் பரமேசுவரத் தாத்தா.

தொழுகை முடிந்து எழுந்த அவாங் ஸ்கர்ட் போன்ற ஓர் ஆடையை அணிந்து கொண்டார். அது முழங்காலுக்குக் கீழ் வரை இருந்தது. ''இதற்குச் **'சராங்'** என்று பெயர். வேலை செய்யப் போகிறவர்கள் குட்டையாக அணிவார்கள். மற்றவர்களின் சராங் நம் வேஷ்டி போலத் தழைய இருக்கும். பெல்ட் அணிந்து கொள்கிறார் பார். தொளதொளன்னு ஒரு சட்டை போட்டுக் கொள்ளுகிறாரே இதற்கு **பாஜூ** என்று பெயர். முரட்டுப் பருத்தி நூலினால் ஆனது. நீண்ட கைகள். பளீர் என்ற ஆரஞ்சு வண்ணத்தில் ஒரு துணியைத் தலையில் சுற்றிக் கொள்ளுகிறார் இல்லையா? இதற்கு **செர்பான்** என்று பெயர். வேலை செய்யும் போது மலேசியர்கள் காலணிகள் ஏதும் அணிவதில்லை. வெள்ளிக்கிழமை மசூதிக்குச் செல்லும்போது அவாங் அணியும், சராங், பாஜூ, செர்பான் இவைகள் எல்லாம் விலை உயர்ந்ததாக இருக்கும். பாஜூ சட்டையின் முன்னால் பைகள் இருக்கும். அப்போது ரப்பர் ஸோல் கொண்ட கான்வாஸ் ஸ்லிப்பர்களை அணிந்து போவார். மசூதிக்குள்ளே போகும் போது பாதுகைகளை வெளியே கழற்றி வைத்து விடுவார்.''

''பெண்களின் உடை எப்படித் தாத்தா?'' என்று கேட்டாள் பட்டு.

''பெண்கள் அணியும் சட்டைக்கு **பாஜூ குராங்** அல்லது 'மூமு' என்று பெயர். கழுத்திலிருந்து முழங் கால் வரை வரும் இது. இடையே வண்ண வண்ணப் பொருள்களால் பெல்ட் போலக் கட்டிக் கொள்வார்கள். தோள்களுக்கு மேலாக வண்ணத் துணியை ஸ்கார்ஃப் போல அணிவார்கள். வெயிலுக்குப் பாதுகாப்பாகப் பயன்படும் இந்த ஸ்கார்ஃபைத் தொழுகையின் போதும், பெங்குலு, இமாம் (மதகுரு) போன்ற பெரியவர்களைச் சந்திக்கும் போதும் தலை மீதாக இழுத்து விட்டுக் கொள்வார்கள். ஆண்களைப் போலவே பெண்களும் வேலை செய்யும் போது காலணிகள் ஏதும் அணிவதில்லை...''

''இவர்களுடைய மீன் பிடிப் படகுக்கு என்னவோ பெயருண்டே தாத்தா!'' என்று கேட்டான் கிட்டு.



அட்டையில் :

மாதர் ஆண்டு இன்னியோடு முடிஞ்சு போச்சுங்க
ஃபாதர் ஆண்டு தொடங்குதற்கு எங்கும் பேச்சுங்க !

வண்ணப்படம் : கே. எஸ். ராமானுஜம்

''ப்ராஹு என்று பெயர். இஞ்சே அவாங்கின் ப்ராஹு பதினாறு அடி நீளம் உடையது.''

இவர்கள் வீட்டைச் சுற்றி வந்து கொண்டிருக்கும் போதே சே அவாங் தன் பிள்ளைகளை எழுப்பி விட்டாள். அலியும் அஹமத்தும்தான் முதலில் எழுந்திருப்பார்கள். சகோதரிகள் பிறகு தான். குளியல் அறையில் அவர்கள் வருமுன் நிறையத் தண்ணீர் ஊற்றிக் குளிப்பதற்காகவே அலியும் அஹமதும் முதலில் எழுந்துவிடுவார்கள். ஒரு நாளைக்கு மூன்று முறை குளிக்கும் பழக்கம் உடையவர்கள் மலேசியர்கள். மேற்கு மலேசியா பூமத்திய ரேகைக்கு அருகாமையில் இருப்பதினால் ஆண்டு முழுதும் வெப்பமாக இருக்கும். மாரிக் காலத்திலும் கன மழை பொழியும்.

'' தாத்தா, . அவர்கள் படுத்துக் கொள்ளும் பாய் நம் ஊர் ஓலைப் பாய் போல் இருக்கிறதே !'' என்றாள் பட்டு. ''ஆமாம். அதற்கு 'டிகார்' என்று பெயர் மெங்குவாங் என்ற ஒரு வகைத் தாவரத்தின் இலையினால் முடைகிறார்கள் இந்தப் பாயை. சுலபமாகச் சுருட்டி மூலையில் வைத்துவிடலாம். அந்தத் தலையணைக்கு 'கபோக்' என்று பெயர்.''

அலிக்குப் பதினொரு வயது இருக்கும். நல்ல உயரம் கட்டான உடல். மங்கலான காவி வண்ண நிறம் கருமையான சுருள் இல்லாத தலைமுடி. கருங் காவி வண்ணக் கண்கள். அகமத்துக்கு ஒன்பது வயது இருக்கலாம். அலியைவிடச் சற்றே ஒல்லியாகவும் குட்டையாகவும் இருந்தான். இருவரும் சமையல் அறையைக் கடந்து ஓடும்போது, 'செலாமத் பாகி' என்றார்கள் தாயாரைப் பார்த்து.

'' நீங்கள் 'குட் மார்னிங் என்பதில்லையா? அந்தக் காலை வணக்கங்கள் என்பதற்குத் தான் மலாய் மொழியில் 'செலாமத் பாகி' என்பார்கள்'' என்று விளக்கம் தந்தார் தாத்தா.

'' இங்கெல்லாம் பள்ளிக்கூடம் காலை ஏழரை மணி முதல் பகல் ஒரு மணி வரைதான். பிறகு குழந்தைகளுக்கு விடுதலை. பெண்கள் பள்ளிக்குப் போகு முன்னும் பள்ளியிலிருந்து வந்த பிறகும் தாயாருக்கு உதவியாகக் காரியங்கள் செய்வார்கள். பையன்கள் தகப்பனாருக்கு உதவியாக வயல்வெளிகளிலோ வேறு வகையிலோ ஒத்தாசையாக இருப்பார்கள். சில பெரிய நகரங்களில் முழு நேரமும் பள்ளிக்கூடம் இருக்கும். காலையில் ஒரு குரூப் மாணவர்களும், பகல் ஒன்றரை மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை வேறு குரூப் மாணவர்களுக்கும் பாடங்கள் நடக்கும். ஆழ்ந்த நீல நிற சராங் மீது வெளிர் நீல பாஜு குராங் அணிவார்கள் மாணவிகள். இது பள்ளிச் சீருடை. வெள்ளைச் சட்டை, வெள்ளை அரை டிராயர், சாங்காக்ஸ் என்ற வெள்ளைக் குல்லாய் அல்லது வெட்டமான கறுப்பு. ஃபெல்ட் குல்லாய், இது பையன்களின் பள்ளிச் சீருடை. மாணவ மாணவிகள் இரு சாராரும் ஆண்டு முழுதும் ரப்பர் வோல்களுள்ள வெள்ளைக் காலணிகளை அணிந்து பள்ளிக்குப் போவார்கள். வெயில் மழைக்கு, நீரில் நனையாதபடி வார்னிஷ் பூசிய காகிதக் குடைகளைப் பெண்கள் எப்போதுமே கையில் வைத்திருப்பார்கள்.

'' சே அவாங் வாரத்தில் மூன்று நாள் திங்கள், புதன், ஞாயிறு, சாமான்கள் வாங்க மார்க்கெட்டுக்குப் போவாள். எல்லாப் பண்டங்களுமே மலேசியாவின் கடைகளில் கிடைக்கும். மலேசியர்களின் அளவைக்கு காட்டீஸ் என்று பெயர். ஒரு காட்டீ என்பது $1\frac{1}{3}$ பவுண்டுக்குச் சமம்.

''மலேசியர்களின் முக்கிய உணவு அரிசிதானே தாத்தா ?'' என்று கேட்டாள் பட்டு.

''ஆமாம். அதே போல மீனும் இவர்கள் உணவில் பிரதான பாகம் வகிக்கிறது. கறி இல்லாத சாப்பாடு கிடையாது. மலேசியர்களுக்கு வேண்டிய அரிசி தாய்லாந்திலிருந்து வரு

கிறது. இங்கும் சமவெளிகளில் வேண்டிய அளவு நெல் பயிரிட்டுக் கொள்கிறார்கள். விரைவிலேயே மலேசியா அரிசி உற்பத்தியில் தன்னிறைவுபெற்று விடும்.

''பகல் வேளைதான் மலேசியர்களுக்கு ஓய்வான போது. ஏனென்றால் அதிக வெப்பம் உள்ள நாடாதலால் வேலைகளைக் காலையில் சீக்கிரமே தொடங்கி முற்பகலுக்குள் முடித்துவிடுவார்கள். மறுபடி பிற்பகலுக்கு மேல் உழைக்கத் தொடங்கி விடுவார்கள். பகலில் கொஞ்ச நேரம் தூக்கம் போடுவார்கள். பெண்கள் தேங்காயிலிருந்து பருப்பை எடுத்து வெயிலில் உலர்த்துவார்கள். சிறுவர்கள் கிணற்றிலிருந்து நீர் கொண்டு வந்து நிரப்புவார்கள், விறகு கொண்டு வந்து சேமிப்பார்கள். வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்வது பெண் குழந்தைகளின் வேலை.''

''நம்மைப் போலத்தான். அதோ அந்தப் பெண் - ரூபையாவா? தென்னம் ஓலையிலிருந்து ஈர்க்கைக் கிழித்து எடுத்துத் துடைப்பம் தயாரிக்கிறாளே. தென்னை மரம் உள்ள ஊர்களிலெல்லாம் இது பழக்கம் போலும்'' என்று வியந்து போனான் பட்டு.

''மாலை நான்கு மணியானால் பெண்கள் எல்லாரும் கடற்கரைக்குப் போய்விடுவார்கள், கடலில் போன கணவன்மார் மீன்களுடன் திரும்பி வருவதை எதிர்பார்த்து. விற்பனையாகாத மீன்களை உப்பிட்டு உலர்த்தி ஏற்றுமதிக்குத் தயாராக்கிவிடுவார்கள்.

''மலேசியாவின் கடற்கரைவாசிகளான உழைப்பாளிகள் இரவுச் சாப்பாட்டைத்தான் விரும்பிச் சாப்பிடுவார்கள். 'சடே' என்பது மலேசியர்களின் விருப்பமான உணவுப் பண்டம். இது ஓர் அசைவ உணவு. இரவு எட்டு மணிக்கு முன்பு சாப்பிடமாட்டார்கள். வாழை, தேங்காய், மீன், இவை உணவில் தாராளமாக இடம் பெறும். அன்று பகலில் நடந்தவைகளை ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டு உற்சாகமாக உண்பார்கள். ஆர அமரச் சாப்பிடுவார்கள், இரவுச் சாப்பாடு ஒரு மணி நேரத்துக்கு மேல் நீடிக்கும்.''

''தாத்தா, மலேசியாவில் சீனர்கள் தான் அதிகம் என்று படித்திருக்கிறேனே அதெப்படி?'' என்று கேட்டான் கிட்டு.

''உண்மைதான். ஆனால் இங்கு வாழும் சீனர்கள் சீனாவைப் பார்த்ததே இல்லை. மலேசியாவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள். சீனர்கள் வியாபாரத்தில் கெட்டிக்காரர்கள். சாமான்களை வாங்குவது விற்பது எல்லாம் இவர்கள் தான். அடுத்தபடியாக இந்தியர்கள்.



சிங்கப்பூரில் ஒரு தெரு

நம்மவர்கள் இங்கு பல உயர் பதவிகளில் இருக்கிறார்கள்.''

''தாத்தா, இருளோடு இருளாக ஏதோ ஒரு சின்னக் கிராமத்துக்குக் கூட்டிக் கொண்டு வந்து நீங்களே எல்லாவற்றையும் கூறிவிட்டீர்கள். நகர வாழ்க்கை மலேசியாவில் எப்படி என்று பார்க்க வேண்டாமா? பினாங் என்பார்களே, அது இங்கேதானே இருக்கிறது?'' என்று கேட்டான் கிட்டு.

'பினாங்' என்பது மலேயாவின் ஒரு பகுதி. பாம்புக் கோயில் என்று ஒரு கோயில் சுங்கே குவாங் என்ற இடத்தில் இருக்கிறது. உலகிலேயே அதிசயமான கோயில் இது. இங்கு நல்ல பாம்பு முதல் மலைப் பாம்பு வரை எல்லாவிதமான பாம்புகளும் ஏராளமாக இருக்கும். பகல் முழுதும் அங்கங்கே சுருண்டும் சேர்ந்தும் தூங்கிக் கொண்டிருக்கும். பகலில் இங்கு பக்தர்கள் வைத்துப் போன உணவுகளை இரவு வேளையில் சாப்பிட வரும்.

''மலேசியா காடுகள் நிறைந்த நாடு. பூமத்திய ரேகைக்கு அருகில் இருப்பதினால் காடுகளில் சில மரங்கள்

பாம்புக் கோயில்



250 அடிகள் உயரம் வரை வளர்ந்திருக்கும். ரப்பர்த் தோட்டங்களுக்கும் வெள்ளியச் சுரங்கங்களுக்கும் புகழ் பெற்றது மலேசியா. ரப்பர் உற்பத்தியில் உலகில் இரண்டாவதாகவும், வெள்ளிய உற்பத்தியில் உலகில் முதன்மையாகவும் இருப்பது மலேசியா தான். மலாக்கா என்பது மலாய் சாம்ராஜ்யத்தின் புராதனத் தலைநகரம். இன்றையத் தலைநகரம் எது தெரியுமா ?...'

''கோலாலம்பூர்தானே ?'' என்று முந்திக் கொண்டு கத்தினான் பட்டு.

''ஆமாம், நாம் கச்சேரிக்கு இப்போது அங்குதான் போகப் போகிறோம். நகர வாழ்க்கையைக் காண வேண்டும் என்று ஆசைப்பட்டாயே, பார்க்கலாம். மேலை நாட்டினரின் நாகரிகம் மிகுந்த நகர வாழ்க்கையில் நாம் ரசிக்க என்ன இருக்கப் போகிறது ? சுங்க வரி கிடையாததலால் உலகில் தயாராகும் எல்லாவிதமான பொருள்களும் மலேசியாவில் கிடைக்கும். எல்லாத் தேசத்தவர்களும் நகரங்களுக்கு வருவதால் நாகரிக மிகுந்த சொர்க்க புரியாகத் திகழுகிறது மலேசியா.

''தாத்தா மலேசியாக் காடுகளில் என்னென்ன மிருகங்கள் இருக்கும்?'' இது பட்டு.

''புலி, யானை, வேங்கை, மலாய்க் கரடி, குரங்குகள் ஏராளம். பறவை இனங்களில் மட்டும் இங்கு 600 வகை உண்டு. அதே மாதிரி வண்ண வண்ண மலர்களையும் தாவரங்களையும் இந்தக் காடுகளில் கண்டு மகிழலாம். மலேசியாவின் நிலப் பரப்பு 1,27,589 சதுர மைல்கள். மதம் இஸ்லாம். புத்த மதமும் வளர அனுமதி உண்டு. ரப்பர் வெள்ளியம் தவிர நெல், தேயிலை, தங்கம், இரும்பு, டங்ஸ்டன், டிடானியம் ஆகியவையும் இங்கு கிடைக்கின்றன.

''சரி. கோலாலம்பூர் 'கோ'கலாமா?'' என்றான் கிட்டு.

அது சரி. இந்த மீனவக் கிராமத்துக்கும் அவாங் குடும்பத்துக்கும் 'குட்பை' கூற வேண்டாமா ? மலாய் மொழியிலேயே கூறுங்கள். **'ஸெலாமத் டிங்கால்'** என்றால் 'குட்பை' என்று பொருள்'' என்றார் தாத்தா.

கிட்டுவும் பட்டுவும் விடை பெற்றுக் கொண்டு கண்ணை மூடினார்கள். அடுத்த விநாடி கோலாலம்பூரின் கோலாகலமான கச்சேரி மண்டபத்தில் உட்கார்ந்து கோகிலகான இசை வாணியின் இன்னிசை நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். தாத்தா கல்யாணி ராக ஆலாபனையைக் கண்களை மூடி மெய் மறந்து ரசித்துக் கொண்டிருந்தார்.

ஒருவனிடம் ஒரு எருமை இருந்தது. அதற்கு ஒரு கன்றுக்குட்டி இருந்தது. அவனுக்கு வேலையில்லை. அந்த எருமையின் பாலைக் கறந்து விற்று வியாபாரம் செய்து வந்தான். நான்கைந்து குழந்தைகள் அவனுக்கு. வயதான அப்பா அம்மா வேறு அவனுக்கு இருந்தார்கள். பெரிய குடும்பத்தை பால் விற்று வரும் பணத்தைக் கொண்டே அவன் காப்பாற்ற வேண்டி வந்தது.

அவனுக்கு அடிக்கடி கோபம் வரும். தன் மனைவி, குழந்தைகளையெல்லாம் திட்டுவான். திட்டுவதற்கு அவன் பயன்படுத்தும் சொல் எது தெரியுமா?

எருமை!

''நான் சொல்லிக்கிட்டே இருக்கேனே, உனக்கென்ன உறைக்கலையா?... உன் தோல் என்ன எருமை மாட்டுத் தோலா?'' என்று மனைவியைத் திட்டுவான்.

எருமையின் காதில் அது விழும். திட்டுவதற்கு தன் பெயரை பயன்படுத்துகிறானே என்று அதற்கு வருத்தமாக இருக்கும்.

''என்ன எருமை மாடு மாதிரி அசைஞ்சு அசைஞ்சு மெள்ள வரே!'' என்று பால் கறக்கச் செல்லும் போது தவிட்டுக் கூடையை எடுத்து வரும் தன் அம்மாவை ஏசுவான் அவன்.

மழையில் குழந்தைகள் நனைந்து கொண்டு வந்தால் ''எருமை மாடுகளா நீங்க, மழையிலே நனைஞ்சுக்கிட்டே மசமசவென்று வர்ரீங்களே?'' என்று அவர்களைப் பார்த்துத் திட்டுவான்.

அதையும் கேட்டுக் கொண்டிருக்கும் எருமை. அவன் வாய்க்கு வாய் 'எருமை எருமை' என்று தன் பெயரைச் சொல்லி திட்டுவது அதற்கு வருத்தத்தை அளிக்கும். தான் அந்தக் குடும்பம் வாழ தன் பால் முழுவதையும்கொடுத்தும் கூடத் தன்னை மட்டமான ஜன்மமாக எண்ணிப் பிறரைத் திட்டத் தன் பெயரைப் பயன்படுத்துகிறானே அவன் என்று எருமை எண்ணி வருந்தியது. இனி அவனுக்குத் தான் கொஞ்சமும் பயன் படக் கூடாதென்று எண்ணி ஒருநாள் தொழுவத்தை விட்டு வெளியில் சென்று விட்டது.

கால் போன போக்கில் அது ஒரு சாலையில் சென்று கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு கார் 'பாம், பாம்' என்று ஹாரன் அடித்துக் கொண்டு பின்னால் வந்தது. அது எவ்வளவு முறை ஹாரன் அடித்தும் எருமை வழியை விட்டு நகராமல் ஆடி ஆடி, அசைந்து அசைந்து சென்று கொண்டிருந்தது.

''எருமை மாடுன்னு சொல்கிறது சரிதான்! எவ்வளவு ஹார்ன் அடிச்சும் மந்தகதியோட ஆடி ஆடி மெதுவாப் போறதைப் பாரு! சரியான எருமை மாடு!'' என்று கார் டிரைவர் திட்டினான் எருமையை.


திடீரென்று மழை கொட்டத் தொடங்கிற்று. மழைக்குப் பயந்து எல்லோரும் ஒண்டிக் கொள்ள இடம் தேடி ஓடினார்கள். எருமை மாடோ மழை பெய்கிறது என்கிற உணர்ச்சியே இல்லாமல் ஆடி, ஆடி அசைந்து சென்றுக் கொண்டிருக்கிறது.

அதைப் பார்த்த ஒருவன் மற்றவனிடம், ''எருமை மாட்டு மேலே மழை பெஞ்ச மாதிரின்னு சொல்வாங்களே, அது சரிதாண்டா!... பாரேன். மழை பெய்கிறது என்கிற நெனைப்பேயில்லாம அது நனைஞ்சுக் கிட்டே ஆடி ஆடி, அசைஞ்சு அசைஞ்சுபோகுது!'' என்றான்.

இதுவும் எருமையின் காதில் விழுந்தது. தன் எஜமானன் தன் பெயரைச் சொல்லித் திட்டுவது சரிதானென்றும், தவறெல்லாம் தன் மீதுதான் என்கிற உண்மை தெரிய வந்தது எருமைக்கு.


அவ்வளவுதான்! வெளியே சென்ற சுவடே தெரியாமல் திரும்பிப் போய்த் தொழுவத்தில் படுத்துக் கொண்டு விட்டது அது.

— கே. வேங்கடராமன்



# மாய மோதிரம்

வாண்டுமாமா



**9**

ஆயுதமிழந்து நின்ற சத்தியனின் உடலிலே கங்காளனின் வாள் மூர்க்காவேசத்துடன் பாய்ந்தது. அப்படியொரு நிலை ஏற்படும் என்பதை எதிர்பாராத சத்தியன் கங்காளனின் வாள் வீச்சுக்குப் பலியானான். எப்படி எப்படியோ சுழன்று வரும் வாள் வீச்சுக்களையெல்லாம் தேக்கிச் சமாளிக்கும் சாமர்த்தியசாலியான சத்தியன் செயலற்றவனாகிப் போனான். விதி சதி செய்யும்போது எத்தகைய வீரனுக்கும் இப்படியொரு முடிவே ஏற்படும். எவ்விதத் தாக்குதல்களையும் அபாயங்களையும் எதிர்த்து வெற்றி கொள்ளும் ஒப்பற்ற வீரனாகத் தன் மகனை உருவாக்கிய தந்தையே அவன் உயிருக்கு யமனாக மாற வேண்டுமானால் அதை விதியின் செயல் என்றுதானே கூற வேண்டும்? கங்காளனுக்கும் சத்தியனுக்கும் நிகழ்ந்த சண்டையிலே பராக்கிரமரின் ஈட்டி குறுக்கிடாதிருக்குமானால்? இருக்க முடியாதே! வானுலகோரின் அருளும் ஆசியும் பெற்ற மன்னரான பராக்கிரமர் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக வாழ முடியாதே.

காதலனின் முடிவைக் கண்ட கானகத்து மலரான பூங்குழலி துடிதுடித்துப் போனாள்.

“யாராலும் அசைக்கவே கூட முடியாத அந்த வாளை என் காதலர், கணவர், எத்தனை இலகுவாக இலேசாக எடுத்தார்! மகத்தான வல்லமை பெற்ற வாளென்று சொன்னார்களே. அது யாரிடமிருக்கிறதோ அவர்களுக்குத் தோல்வியே கிடையாது என்கிறார்களே. இப்போது என் உயிரின் உயிரான இவர் இப்படி.... ஐயோ...!” உடல் குலுங்கத் துடிக்கும் அந்த இளங் கொடியை அணைத்துக் கொண்டாள் புவனா. அவள் கண்களிலிருந்தும் அருவியாகப் பெருகிக் கொண்டிருந்தது கண்ணீர். பேச முடியாத துக்கமும் வேதனையும் நெஞ்சை அடைத்தன அவளுக்கு.

பராக்கிரமரின் நிலை எப்படி இருந்தது? தான் பெற்ற மகன். தன்னால் மாவீரனாக உருவாக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற பலசாலியின் முடிவுக்குத் தானே காரணமாக வேண்டிய ஒரு சூழ்நிலை எற்பட்டதைக்கண்டு அந்தத் தந்தை உள்ளம் வேதனையால் பொங்கிப் போயிற்று. தன் காலடியில் ஆஜானுபாகுவான அந்த அழகு உருவம் வெட்டி வீழ்த்திய மரம் போல வீழ்ந்து கிடப்பதைப் பார்த்துக் கொண்டு சில விநாடிகள் நின்றார். ‘இத்தகைய ஒரு வீரன், இளை

னான், அழகனின் அழிவுக்குத் தான் காரணமாக இருப்பானேன்? 'அந்த விறகு வெட்டியின் பக்கம் நியாயம் இருந்தது. நீதியை, தர்மத்தைக் காக்க வேண்டியது என் கடமை. என் சொந்த மகனானாலும் தர்மத்துக்குத் துரோகம் புரிய மாட்டேன்' என்ற பராக்கிரமரின் கண்ணீர் காய்ந்தது. நிமிர்ந்தார். எதிரே சிலையாக நின்று கொண்டிருந்தான் கங்காளன்.

அவன் கோபம், பழிவாங்கும் வெறியெல்லாம் அடங்கிய நிலையில் தன் செயலின் விளைவைக் காண முடியாதவனாகக் கலங்கிப் போனவனாக நின்றான் கங்காளன். அவனுக்குமே கூட சத்தியனின் மரணம் மகத்தான தவறாகத் தோன்றியது. அவனோடு வாள் வீச்சிலே ஈடுபட்டிருந்த அந்த வேளையில் தான் அவன் எண்ணினான். 'இவ்வளவு அற்புதமாக வாளைக் கையாளும் இந்த வாலிபன் ஓர் ஒப்பற்ற வீரனாகத்தான் இருக்க வேண்டும். இந்த இணையற்ற வீர இளைஞனை என் மகள் காதலித்ததிலும் தவறில்லை. இவனையே என் மகளுக்கு மணாளனாக்கி விட்டால் என்ன?' கங்காளனின் மனம் மெள்ள மெள்ளச் சத்தியனின் வளைப்பிலே, அவன் லாகவமாக வாள் வீசும் திறமையிலே லயிக்கலாயிற்று. இருந்தாலும் அவன் தன் போராட்டத்தை நிறுத்தவில்லை. அவன் உள்ளத்திலே போராட்டம் தொடங்கிய போது. அதைக் காலங்கடந்த மனமாற்றமாக்கி விட்டது விதி. இப்போதோ அந்த வீரனின் இழப்பை அவனாலுமே தாங்க முடியவில்லை. இந்த நிலையில்.....

பராக்கிரமர் தம் முன்னால் தலை குனிந்துநிற்கும் கங்காளனைப்பார்த்தார். தம் மகனின் மரணத்துக்குக் காரணமான வாள் – சத்தியனின் ரத்தத்தில் நனைந்த வாள் - அவர் கண்களிலே பட்டதும் அணை உடைந்த வெள்ளமாக அவருடைய துக்கம் வெடித்தது. கோபம் குமுறிக் குமிழியிட்டது. நீதிக்காக மகனை இழந்தாயிற்று. நேர்மைக்காகப் பாசத்தை நசுக்கியாயிற்று. கடமை முடிந்தது. இனி வானுலகோர் அவர் மீது பழிகூற முடியாது. இதற்கு மேலும் அவரால் கல்லாக இருக்க முடியவில்லை. மகனை இழந்த சோகம், யாரிடம் எவ்வளவோ எதிர்பார்த்துக் காத்திருந்தாரோ, யாரைக் கொண்டு பல பராக்கிரமச் செயல்களை முடிக்கத் திட்டமிட்டிருந்தாரோ அந்த அவனை இழந்து விட்டதினால் ஏற்பட்ட தவிப்பு நெருப்பாக அவர் கண்களிலிருந்து வெளிப்பட்டது. கங்காளனை அந்த உக்கிரமான கண்களால் பார்த்தார்.



அடுத்த விநாடி அவன் 'ஆ' வென்று அலறியபடிக் கீழே சாய்ந்தான். உயிரற்ற பிணமானான். பராக்கிரமரின் புத்திர சோகம் அவனைப் பலிவாங்கி விட்டது. பார்வையினாலேயே ஒருவனைக் கொல்லும் சக்தி அந்தச் சோகத்துக்கு உண்டு. அது எல்லோருக்குமே வந்து விடாது. சத்திய வாழ்க்கை நடத்துபவர்களுக்கே அது சாத்தியமாகும்.

பராக்கிரமரின் கோபம் அடுத்தபடியாகப் புவனாவின் மீது திரும்பியது. அவள் விருப்பத்துக்கு மாறாக அந்தக் காந்தருவக் கன்னி அவர் மகனுக்கு உதவ நினைத்தாள் அல்லவா? அதற்கு உரிய தண்டனையை அவள் அடைந்தே தீர வேண்டும் என்று எண்ணினார் அவர். கங்காளன் உயிரைக் குடித்தும்கூட அவரது சோகத்தின் வேகம், வேதனையின் தாபம் தணியவில்லை. புவனாவின் மீது திரும்பியது அது.

பராக்கிரமரின் உள்ளத்தைப் புரிந்து கொண்ட புவனா சட்டென்று சத்தியனின் உயிரற்ற உடலைத் தூக்கிக் கொண்டாள். தன்னுடைய பறக்கும் குதிரை மீதேறினாள். வான வீதியிலே சிறகடித்துப் பறந்து மிதந்தது அந்த மாயக் குதிரை. பராக்கிரமரின் உக்கிரமான பார்வையிலிருந்து தப்பி விடவே அப்படிப் பறந்தாள் புவனா. ஆனால்



விதியின் விளையாட்டு இன்னும் முடியாத போது அவளால் தப்பிவிட முடியுமா? புவனாவை இடி முழக்கம் தொடர்ந்தது. மின்னல்கள் பளீர், பளீர் என்று சாட்டையாக வீசித் தகதகத்தன. வானத்திலே வண்ணவண்ண மேகங்களெல்லாம் உருண்டு திரண்டு புகையாகச் சுருண்டெழுந்து அவள் பாதையை மறைத்தன. புவனா தன் தோள் மீதாகக் கிடுகிடுக்கும் இடியின் அதிர்வை உணர்ந்தாள். மேகக்கூட்டத்தைக் கீறிக் கொண்டு மின்னல், கொடியாகப் படர்ந்து அவள் பார்வையைக் குருடாக்க முயன்றது. இவ்வளவும் பராக்கிரமருடைய உள்ளக் குமுறல் என்பதை அவள் அறிவாள். மகனை இழந்த அந்த உள்ளத்தின் தாபமே இந்த இடியும் மின்னலும் புயலும்.

புவனாவைத் தொடர்ந்து துரத்தி வந்தன இடியும் மின்னலும். புவனா கலங்கவில்லை. தான் சுமந்து வரும் சத்தியனின் உடலை மாவீரர்கள் அமைதி கொள்ளும் புனிதமான அந்த இடத்திலே கொண்டு போய் வைத்தாள். தலைசிறந்த வீரர்களைக் கடைசியாக அங்குதான் கொண்டு போய் அடக்கம் செய்வார்கள். மீளாத நித்திரையில் ஆழ்ந்த சத்தியனையும் அங்கு சமாதியில் கொண்டு வைத்தாள் புவனா. அவன் நிலைக்காக அவள் உள்ளம் அழுதது.

அதே வேளையில் பராக்கிரமரின் இடிக் குரல் அதிர்ந்தது. "புவனா! என் விருப்பத்துக்கு மாறாக நீ நடந்து கொண்டாய். அதற்கான தண்டனையை நீ அடைந்தாக வேண்டும்."

தன்னைப் பின்தொடர்ந்து வருகிறார் பராக்கிரமர் என்பதை அவள் அறிவாள். இந்த இடி மின்னல்களின் முழக்கம் அவரது கோபம்தானே?

"உங்கள் முதல் விருப்பப்படிதானே நான் செயல்பட எண்ணினேன்" என்றாள் புவனா. அவள் முன்னால் மேகங்களின் நடுவே மிகப் பெரிய மாயா உருவாக நின்றார் பராக்கிரமர். மின்னல்களின் ஒளி அவர் உருவத்தில் விநாடிக்கு விநாடி விதம் விதமான வண்ணக் கலவைகளை உண்டாக்கிக் கொண்டிருந்தது. அந்த நிலையில் அவரைக் காணவே பயங்கரமாக இருந்தது.

"என் முதல் எண்ணம் எதுவானாலும் முடிவான எண்ணத்துக்கு முற்றிலும் மாறாக நீ செயல்படத் துணிந்தது குற்றம்தானே? ஆகவே நீ உன் தேவமாதர்களுக்கான சக்தியை இழந்து சாதாரண மனிதப் பிறவி போலப் புவியில் வாழ வேண்டும். அதுவும் நினைவிழந்த நிலையில், ஒரு மாயத் துயிலில்

ஆழ்ந்து கிடப்பாய், மோன நிலையில். உயிர் இருக்கும். ஆனால் செயல் இருக்காது'' என்றார் பராக்கிரமர்.

''ஐயோ! இது கொடுமை. சத்தியனுக்கு உதவ எண்ணினேனே தவிர உதவவில்லையே! இதற்கா எனக்கு இத்தகைய தண்டனை?''

''செயல்படாததினால்தான் தண்டனையின் தன்மையிலும் கருணை காட்டப்பட்டிருக்கிறது.''


''இதுவா கருணை. இந்த மாயத் துயிலிலேயே நான் மாண்டு போக வேண்டியதுதானா?''

''வேண்டாம். இந்த உறக்கத்திலிருந்து உன்னை யார் எழுப்புகிறானோ அவனே உன்னை மனைவியாக அடையும் தகுதி பெற்றவன். அவனோடு நீ வாழ்ந்த பிறகு வானுலகம் செல்லலாம்.''

''அரசர்க்கரசே! பராக்கிரமரே!.... எனக்கு இன்னுமொரு வரம் தர வேண்டும். என்னை இந்த உறக்கத்திலிருந்து எழுப்பக் கூடியவன் வீரர்களிலெல்லாம் தலைசிறந்த மாவீரனாக இருக்க வேண்டும்'' என்று கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டாள் காந்தருவ மங்கை புவனா.

புவனாவின் கண்ணீர் பராக்கிரமரின் உள்ளத்தை உருக்கிவிட்டது. மெள்ள மெள்ள அவருடைய கோபமும் தாபமும் தணிந்திருந்தன. தனக்காக, தன் நாட்டின் நலனுக்காக உலகின் மாவீரர்களை யெல்லாம் கொண்டு வந்து அவர்களின் ஆவிக்கு உயிரூட்டி ஒரு பாதுகாப்புப் படையை உருவாக்கிக் காவல் தெய்வமாகக் கடமையாற்றியதை எண்ணிப் பார்த்தார். எத்தனையோ பாடுபட்டும் 'ஸ்வர்ண நதித் தங்கத்தின் பழி வாங்கும் செயலை தடுத்து நிறுத்த முடியவில்லை. அதற்குப் புவனாவும் இலக்கானாளே என்பதை எண்ணியபோது அவளிடம் கருணை பிறந்தது பராக்கிரமருக்கு.

''உன் விருப்பப்படியே வரம் அளிக்கிறேன். உன்னைத் துயில் எழுப்புபவன் வீரர்களில் எல்லாம் தலை சிறந்த வீரனாகத் திகழுவான்'' என்று கூறியபடி தன் கையிலிருந்த ஈட்டியினால் அருகிலிருந்த பாறையில் குத்தினார். அடுத்த விநாடி குத்துண்ட இடத்திலிருந்து தீ ஜ்வாலை குபீரென்று கிளம்பிப் புவனாவைச் சூழ்ந்து கொண்டு வட்டமாக எரியலாயிற்று. இதற்குள் புவனாவை ஏதோ ஒரு மாய சக்தி ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தியது. நினைவற்ற நிலையில் அவள் பாறை மீது படுத்தபடி தூங்கலானாள். அவள் அணிந்திருந்த வாளும், கேடயமும் கிரீடமும் அவள் அருகிலே இருந்தன.



அவள் ஏறி வந்த பறக்கும் மாயக் குதிரை அவள் உறக்கத்திலாழ்ந்ததும் உடனேயே அங்கிருந்து மறைந்து விட்டது. அண்ட முடியாத அனல் வீசும் தீ வட்டத்தின் நடுவே கொஞ்சமும் பாதிக்கப்படாத புது மலராகத் தூங்கிக் கொண்டிருந்தாள் புவனா.

''இதே உறக்க நிலையில் இந்தத் தீ வட்டத்தின் நடுவே நீ உயிர் வாழ்ந்து கொண்டிருப்பாய். எவன் ஒருவன் இந்த நெருப்புக் கோட்டைக்குள் துணிந்து புகுந்து உன்னைத் தொட்டு எழுப்புகிறானோ அப்போது நீ உணர்வு பெறுவாய். அது வரை உன் உடல் கெடாது. உயிரும் பிரியாது. கந்தர்வ மங்கையான நீ காலத்தை வென்றவள். என்றும் கன்னியாக இருப்பவள். ஆகவே எத்தனை ஆண்டுகளானாலும் உன்னை மூப்பும் அண்டாது'' என்று கூறியபடி மாயத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்ட புவனாவைப் பார்த்து ஒரு பெருமூச்சுடன் அந்த இடத்தைவிட்டு அகன்றார் பராக்கிரமர்.

புவனா இப்படி எத்தனை காலம் உறங்கிக் கொண்டிருந்தாள்? அவளைத் துயில் எழுப்ப வந்தவன் யார்? இவைகளுக்கெல்லாம் இக்கதையின் இரண்டாம் பாகத்தில் விடையும் விளக்கமும் கிடைக்கும்.

— முதல் பாகம் முடிந்தது —



# தேன் காட்டிப் பறவை

ஆப்பிரிக்காவில் வாழும் பழங்குடி மக்களில் 'வாண்டோராபாஸ்' (Wando-robos) எனப்படுபவர் ஒரு வகையினர் ஆவர். அவர்கள் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு இயற்கையை நம்பி வாழ்ந்தனர். வேட்டையாடுவது அவர்கள் தொழில். அவர்கள் அறிந்த ஒரே இனிப்புணவு காட்டுத் தேன் ஆகும். காட்டுத் தேனை அவர்கள் அடையும் முறையோ விநோதமானது. 'ஹனி கைட் பேர்ட்' எனப்படும் ஒரு வகைப் பறவையின் உதவியுடன் தேன் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிப்பார்கள்.

இப் பறவைக்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பு மிகவும் ஆச்சரியமானது. இப்பறவை நம் நாட்டில் உள்ள குயில் போல் இருக்கும். ஆனால் மஞ்சள் கலந்த பச்சை நிறம் உடையது. வயிற்றுப் பாகம் வெண்மையாக இருக்கும். வாலில் நீண்ட வெண்மையான இறகுகள் காணப்படும். இவை பறக்கும்போது அழகாகத் தோன்றும்.

இப்பறவையின் உணவு தேன். எனவே, உணவு வேண்டும்பொழுது இப்பழங்குடி மக்கள் தங்கியிருக்கும் இடத்தின் அருகில் வந்து தங்கும். ஆனால் அடிக்கடி ஒலி எழுப்பிக் கொண்டே இருக்கும். இம்மனிதர்களிடமிருந்து மெல்லிய சீழ்க்கை ஒலி பதிலாக வரும் வரை இப்பறவை ஒலி எழுப்புவதை நிறுத்தாது. பின் மனிதர்கள் தன்னைக் கண்டுபிடித்து விட்டார்கள் என்று அறிந்தவுடன் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்துக்கு ஒலி எழுப்பிக் கொண்டே பறந்து வழி காட்டும். மனிதர்களும் பதில் ஒலி கொடுத்துக் கொண்டே அதன் பின்னே செல்வார்கள். இவ்வாறாக அப்பறவை தேன் கூடு இருக்கும் மரம் வரை அவர்களை அழைத்துச் செல்லும்.

பின்பு அது மனிதர்களை நன்றாக ஆராய்ந்து பார்க்கும்படி கூறுவதுபோல் கீச்கீச் என்று மிகுந்த சப்தமிடும். வழக்கமாக அப்பறவை உட்காரும் இடத்துக்கு அருகில் தேன் கூடு காணப்படும். பெரும்பாலும் பழ மரப் பொந்துகளில் தேன்கூடு காணப்படும். இம்மனிதர்கள் தங்கள் காதுகளை அடி மரத்தில் வைத்து தேனீக்களின் ரீங்காரத்தைக் கொண்டு கூடு இருக்கும் இடத்தைக் கண்டு பிடிப்பார்கள். இப்பறவை அவ்விடத்தை விட்டுச் செல்லாமல், அவர்கள் தேன் எடுப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும். அவர்கள் நெருப்பு மூட்டித் தேனீக்களை விரட்டித் தேன் எடுப்பர். சிறு பகுதித் தேனை இப்பறவைக்கு அன்பளிப்பாக வைத்துவிட்டு மீதியை எடுத்துச் செல்வார்கள். அவர்கள் சென்ற உடன் இப்பறவை அக்கூட்டில் உள்ள தேனைக் குடித்து விட்டு, அதில் உள்ள மெழுகு முதலியவற்றை மகிழ்வுடன் உண்ணும். காலம் செல்லச் செல்ல வேற்றுமனிதர்கள் அங்கு சென்று வெவ்வேறு வகையான இனிப்புக்களை விற்றதால் அம்மக்கள் இப்பறவையின் உதவி கொண்டு தேன் பெறுவதை இப்போது விட்டு விட்டனர். —மேராஜ்



# சுண்டெலியின் தந்திரம்

அந்தச் சுண்டெலி வடக்குச் சுவரிலிருந்து தெற்குச் சுவருக்குப் போக வேண்டும். தெற்குச் சுவரைத்தாண்டி விட்டால் அங்கே ஒரு பானை நிறைய இருக்கும் முறுக்கை வேண்டிய மட்டும் சாப்பிடலாம்.

ஆகவே வளையிலிருந்து எட்டிப் பார்த்த சுண்டெலி, இரண்டு சுவருக்குமிடையில் ஒரு கயிற்றுக் கொடி கட்டியிருப்பதைப் பார்த்தது. அதன் மீது ஓடிச் சென்றால் தெற்குச் சுவரை அடைந்து .விடலாம்.

ஆனால், கீழே ஒரு பெரிய பூனை உட்கார்ந்து மேலே பார்த்துக் கொண்டேயிருந்தது. சுண்டெலி வெளியே வர வேண்டியதுதான்; பூனை ஒரே தாவல் சுண்டெலியைப் பிடித்துத் தின்றுவிடும்)



உயிரையும் இழக்கக் கூடாது; பசியையும் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு என்ன வழி?'' என்று அந்தச் சுண்டெலி யோசித்தது. யோசித்தது அப்படி யோசித்தது. கடைசியில் ஒன்றும் புரியாமல் வெகு நேரம் கீழே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

கடைசியில் அந்தச் சுண்டெலியின் மனதில் ஒரு திட்டம் உருவாகியது. வளையிலிருந்தவாறே அது கீழே பார்த்து, ''பூனை மாமா' பூனை மாமா! எனக்கு ஒரு உதவி செய்ய மாட்டீர்களா?'' என்று கெஞ்சியது.

''என்ன உதவி வேண்டும்? சீக்கிரம் சொல்லுடா சின்னப் பயலே'' என்றது பூனை.

''ஒன்றுமில்லை மாமா! தயவுசெய்து இந்தக் கயிறு .பலமானது தானா என்று கொஞ்சம் .பார்த்துச் சொல்லுங்களேன்!'' என்றது சுண்டெலி.



''பலமானதுதான். சீக்கிரம் வளையிலிருந்து வெளியே வா!'' என்றது பூனை.

''நான் வந்து விடுவேன்; எனக்குப் பயமில்லை. ஆனால் எனக்குப் பின்னால் என் தகப்பனார், தாயார், மாமனார், மாமியார் எல்லோரும் வருகிறார்கள். எல்லாரும் என்னைவிடப் பருமனானவர்கள். அதனால் என்னை முதலில் அனுப்பி, கயிறு பலமானதுதானா என்று பார்க்கச் சொன்னார்கள். நான் பத்திரமாகச் சுவருக்குப் போய்ச் சேர்ந்தவுடன் ''கீ, கீ'' என்று கத்துவேன். அந்தச் சத்தம் கேட்டு, கயிறு பலமானதுதான் என்று எண்ணி என் உறவினர்கள் அனைவரும் வருவார்கள்'' என்றது சுண்டெலி.

பூனைக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை 'இன்றைக்குச் சரியான விருந்து கிடைக்கப் போகிறது!' என்று அது மனம் பூரித்தது. ஆகவே, ''அவசரப்பட்டு இந்தச் சுண்டெலியை ஒன்றும்பண்ண வேண்டாம்; பேசாமல் போகட்டும். அதற்குப் பின்னால் வரும் கொழுத்த எலிகளைப் பிடித்துத் தின்போம்'' என்று தீர்மானித்தது.

பிறகு, ''அருமை சுண்டெலிப் பயலே! பயப்படாமல் போ! கயிறு பலமாகவே யிருக்கிறது!'' என்றது பூனை.

சுண்டெலி தைரியமடைந்து வளையை விட்டு வெளியே வந்தது. மெதுவாக தெற்குச் சுவரை நோக்கி ஊர்ந்து சென்றது. பூனை அந்தச் சின்னஞ்சிறிய எலியை லட்சியம் செய்யாமல், வளைக்குள்ளிருந்து வரப்போகும் பெரிய எலிகளை எதிர்பார்த்திருந்தது.

பயமில்லாமல் எதிர்ச் சுவரையடைந்த சுண்டெலி 'கீ! கீ!' என்று கத்திக் கொண்டு ஓடிப் போய் விட்டது. பூனையும் வைத்த கண் வாங்காமல் வளையையே பார்த்துக் கொண்டிருந்தது. வெகு நேரமாகியும் ஏன் சுண்டெலியின் உறவினர் கூட்டம் வரவில்லை என்பதை நினைக்கும் பொழுது பூனைக்குக் குழப்பமாயிருந்தது. அந்த வீட்டில் சுண்டெலியைத் தவிர வேறு எலிகளே இல்லை. தான் தப்புவதற்காகவே இம்மாதிரி ஒரு நாடகத்தைச் சுண்டெலி நடத்தியது என்பது பூனைக்குத் தெரியாது.

**கே. கே. ராஜன்**

## தெரியுமா?



2083. சுறா, திமிங்கிலம், வாளைமீன், காட் இவைகள் எல்லாம் கடல் வாழ் ஜந்துக்கள். ஆனால் ஒன்றுமட்டும் இந்த வரிசையிலிருந்து தனிமைப்படுத்தப்பட வேண்டியது. அது எது?

2084. நிலத்தில் வாழும் மிருகங் களில் மிகப் பெரியது யானை என்றால் ஐரோப்பாவில் யானை கிடையாது. அப் படியானால் ஐரோப்பாக் கண்டத்தின் மிகப் பெரிய நிலம்வாழ் மிருகம் எது?

2085. ரோஜா மலர்களிலிருந்து தயாரிக்கப்படும் அத்தர் என்ற வாச னைப் பொருளைப் பெருமளவுக்குத் தயா ரிக்கும் ஐரோப்பிய நாடு எது?

2086. காக்னே (Cockney) என்பது குறிப்பிட்ட ஓர் இடத்தில் பிறக்கும் மனிதர்களுக்கான மதிப்பளிக்கும் பெயர். காக்னேக்களாக ஒருவர் இருக்க வேண்டுமென்றால் எங்கே பிறக்க வேண்டும் தெரியுமா?

2087. அவசர உதவிக்கு நாம் இங்கு 100 எண்ணைச் சுழற்றுகிறோம் டெலி போனில். இங்கிலாந்தில் இருந்தால் நாம் சுழற்ற வேண்டிய எண் எது?

2088. டிக்கின் பதக்கம் (Dikin Medal) என்று ஒரு விருது இங்கிலாந் தில். இந்த மெடல் வழங்கப்படுவது யாருக்கு?

2089. முன்னாள் உலகப் புகழ் குத் துச்சண்டை வீரரான ஜோ லூயியின் முழுப் பெயர் தெரியுமா?

2090. தென் ஆப்பிரிக்கா ஒரு குடி யரசாகச் சுதந்திரம் பெற்றது எந்த ஆண்டில்?

2091. பிரபல நாவலாசிரியரான டிக் கன்ஸ் தாம் எழுதிய ஒரு நாவலை முடிக் கவே இல்லை. இதன் பெயர் தெரியுமா?

2092. மோனலிசா என்ற புன்ன கைக் கன்னியின் பிரபல ஓவியம் இப் போது எங்குள்ளது?

2093. ரஷ்யாவின் சார்லஸ் டிக் கன்ஸ் என்று புகழ்ப்பட யாரை அழைப் பது வழக்கம்?

2094. லெபிடோப்டரிஸ்ட் (Lepidopterist) என்பவர்கள் எதை ஆராய்வார்கள்?

2095. மில்லினியம் (Millennium) என்றால் என்ன?

2096. பண்டைக்கால ஏழு உலக அதிசயங்களில் இன்று மிஞ்சியுள்ளது எது?

2097. எவர்கிளேட்ஸ் என்ற சதுப்பு நிலங்கள் எந்த அமெரிக்க மாகாணத் தில் உள்ளது?

2098. துருவப் பகுதிகள் இரண்டில் எதில் ஒரு தனிக் கண்டத்தைப்போன்ற நிலப்பகுதி உள்ளது?

2099. ஆப்பிரிகான் மொழி பேசும் நாடு எது?

2100 ஒரு காலத்தில் இங்கிலாந்தில் ரோமானியர்களால் எபோராகம் என் றழைக்கப்பட்ட நகரத்துக்கு இன்று என்ன பெயர்?

## தெரியுமே!



விடை: 2083. திமிங்கிலம். இது பாலூட்டி (மம்மல்) வகையைச் சேர்ந்தது. 2084. ஐரோப்பிய பைசன் என்ற காட்டெருமை. 2085. பல்கேரியா. 2086. லண்டனில் 'பௌ சர்ச்' (Bow Church) என்று ஒரு மாதா கோயில். இதன் மணியின் ஒலி எவ்வளவு தூரம் கேட்கிறதோ அந்த எல்லைக்குள் பிறப்பவர் களே உண்மையான காக்னேக்கள். 2087. இங்கிலாந் தில் 999 என்ற எண்ணை. 2088. பிராணிகள் நிரச் செயல் புரியுமானால் அவைகளுக்கு. 2089. ஜோசப் லூயி பாரோ. 2090. தென்னாப்பிரிக்கா 1961ல் குடியரசாக அங்கீகரிக்கப்பட்டது. 2091. எட்வின் ட்ரூட். 2092. பாரிஸிலுள்ள லோவ்ரே மியூஸியத்தில் 2093. மாக்ஸிம் கார்க்கியை. 2094. வண்ணத்துப் பூச்சிகளை. 2096. ஆயிரம் ஆண்டு விழாவுக்கு இப்பெயர். 2096. எகிப்தில் உள்ள பிரமிட்டுகள். 2097. ஃப்ளோரிடாவில். 2098. அண்டார்ட்டிகாவில் (தென் துருவப் பிரதேசம்.) 2099. தென்னாப்பிரிக் காவில் பேசப்படும் மொழிக்கு இப்பெயர். 2100. யார்க் என்று.

கோகுலத்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்.

# நாடறிந்த ஒன்று, நம்பகம் நன்று!




## கேமல் இங்க்

உங்கள் மேசையில் ஒரு பாட்டில்
இருந்தாலே, பெருமை கூடும்,
தங்குதடையின்றி எழுத்து ஓடும்.
பளிச்சிடும் ஆறு வண்ணங்களில்,
வாஷபிள் ராயல் ப்ளூ உள்ளிட,
கிடைக்கிறது.

கேமல் ஸ்டேஷனரி
படைப்பகம்

வழங்கிடும் பிற: கம், பேஸ்ட்,
டூப்ளிகேட்டிங் இங்க்,
ஸ்டாம்ப் பேட், மார்க்கிங்
இங்க், இன்னும் பலப்பல.

REGISTERED No. M 9040

GOKULAM Childrens Fortnightly





